# தென்றல்

★★★★★★★ கிழமை இதழ் ★★★★★★★★

ஆசிரியர்: கண்ணதாசன்

உள்நாடு (இலங்கை உள்பட) விலை 16 புதிய காசு ★ வெளிநாடு 20 காசு—அலுவலகம்: 'தென்றல்', சென்னை-6.

| மலர் 7 | சென்னை. திருவள்ளுவர் ஆண்டு 1992, பங்குனி 19 (1-4-'61) சனிக்கிழமை | இதழ் 41 |
|---|---|---|


# கரியப்பாவின் கருத்து என்ன?

மதுரை-செளந்தரராசன், பி.ஏ.பி.எல்,

அண்மையில், இந்திய அரசாங்கத்தின் பாதுகாப்புக் கொள்கைகளைப் பற்றியும், வெளி நாட்டுக் கொள்கைகளைப் பற்றியும் காங்கிரசின் ஆதரவிலேயே பெரும் பதவி வகித்தவர்கள் பல அரிய கருத்துக்களை வெளியிட்டுப் பொதுமக்களது விழிப்புணர்ச்சியை ஒரு முக்கிய இடத்திற்குக் கொண்டுவருகிறார்கள். பாதுகாப்புக்காக ஏறத்தாழ மத்திய அரசாங்க நிதியில் மூன்றிலொரு பங்கு செலவிடப்பட்டு வருவதாகக் கூறலாம். அதனால் மக்களுக்கு ஏற்பட்டுள்ள பலன்களைச் சுட்டிக்காட்ட முடியாது.

ஆயினும் சூழ்நிலைகள் எவ்வாறு உறுதியாக ஆகி இந்நாட்டின் எல்லைகள் தொல்லைகளுட்படா முறையில் இருந்து வருகின்றன என்பதனையாவது அரசாங்கம் காட்டத் தயாராக இருக்கவேண்டும்.

சில உறுப்பினர்கள் பாராளுமன்றத்தில் பாதுகாப்புக் கொள்கையைத் தங்களது சீரியநோக்கமாகவே கொண்டு மத்திய அரசாங்கத்தின் கவனக்குறைவை அவ்வப்போது எடுத்துக் காட்டியிருக்கிறார்கள். குறிப்பாகக் காலஞ்சென்ற டாக்டர் சியாம் பிரசாத் முகர்ஜி, இருதயநாத் குன்ஸ்ரூ, என். சி. சட்டர்ஜி, மேகானந்த்ஷா, பெரோஷ் காந்தி, ஆச்சாரியா கிருபளானி, ஆகியோர் அடிக்கடி எல்லைப்புற அலுவல்களில் அதிக ஆர்வம் காட்டி வந்திருக்கின்றனர். அப்பொழுதெல்லாம் மத்திய பாதுகாப்பு அமைச்சர் ஏதோ நிலைமைகளைச் சமாளித்துப் பதிலளிக்க முற்பட்டாரே தவிர உண்மையிலேயே நிலைமையைத் திருத்திக்கொள்ள முற்பட்டதாகத் தெரியவில்லை.

இந்தியரவின் வடகிழக்கு எல்லையில் சீனப்படைகள் ஆக்கிரமித்து வருவதை இந்திய அரசாங்கம் ஆவேசத்தோடு அணுகவில்லை. ஏதோ உள்நாட்டு விவகாரம் போல் மிக அமைதியாகவே கையாண்டது! அமைதி ஒரு குறிப்பிட்ட எண்ணத்தின் ஆழத்தைக் குறிக்கலாம். ஆனால் நிரந்தர அமைதி எதைக் குறிக்கமுடியும்? அலட்சியப் போக்கினைத்தான் அது குறிக்கும்! சீனப்படைகளின் தவற்றினைப் பலர் உணர்த்தியதற்குப் பின் கண்டனக் குறிப்பு விடப்பட்டது. அதற்குச் சீன அரசினர் "தமது முறையான எல்லைதான் 'லாடக்' 'திபெத்' வரைஇருக்கிறதென்றும், வேறு வித எண்ணம் எதுவும் சீனத்திற்கு இல்லை என்றும், கடந்த பத்து ஆண்டுக்காலமாக அப்பகுதிகளில் சாலைகள் போடப்பட்டு வருகின்றன', என்றும் தெரிவித்தனர். இச்செய்தி, இந்திய எல்லைப்புறப் பாதுகாப்பு ஏற்பாடுகளின் தன்மைகளை விளக்கிக்காட்டுவதாய் அமைந்தது. அதன்பிறகு உள்நாட்டில் சீனர்களையும் சீனாவுடன் தொடர்பு கொண்டுள்ளவர்களையும் சீரிய கண்ணோட்டத்துடன் இந்தியா பார்த்து வருகிறது. எல்லையில் அதிகமான படைகளை அனுப்பியும், சீனா குறிப்பிட்டுள்ள எல்லைக் கோடுகள் தவறானவை என்று சுட்டிக்காட்டியும் சற்று எச்சரிக்கையாக இருந்து வருகிறது.

இந்நிலையில் காங்கோ நாட்டிற்கு இந்திய அரசாங்கம் தனது படை வீரர்களில் நல்ல தகுதியும் நவீனமுறை பயிற்சியும் பெற்ற 3000 பேரைஅனுப்பி வைத்திருக்கிறது. இதை முன்னாள் தளபதி கரியப்பா கண்டித்துப் பேசியிருக்கிறார். "ஐ. க். சபையின் போர்நிறுத்தம் மற்றும் சமரச அலுவல்களுக்காக ஏதோ அனுதாப அடையாளமாக ஒரு நூறு பேர் கொண்ட சிறு அணிவகுப்பை அனுப்பினால் போதுமானது. அதைவிட்டு நல்ல வீரர்களாய்த் தேர்ந்தெடுத்து நல்ல ஆயுதங்களாகவும் பொறுக்கி மொத்தமாக காங்கோவிற்கு அனுப்ப வேண்டியது அவசியமில்லை." என்பது கரியப்பா கருத்து. மருத்துவ வசதிகள் செய்து கொடுக்கவும் காங்கோவில் இந்தியா ஏற்பாடு செய்திருக்கிறது! ஐந்நூறு படுக்கைகளை கவனித்துக்கொள்ள ஏற்படும் எல்லாச் செலவுகளையும் இந்திய அரசாங்கம் ஏற்றுக்கொள்ள முன் வந்திருக்கிறது! "பண்டித நேருவினுடைய பெருந்தன்மை பாராட்டற்குரியதுதான். ஆனால் அவர் மேற்கொண்டுள்ள இம்முயற்சி சரியான நேரத்தில் செய்யப்பட்டதாக இல்லை" என்கிறார் முன்னாள் தளபதிகரியப்பா!

கரியப்பா தளபதி மட்டுமல்ல அரசியல் விற்பன்னருங்கூட! இந்தியாவின் தூதுவராக ஆஸ்திரேலியாவில் சிலகாலம் பணி புரிந்தவர். அவர், தென்னகத்திலுள்ள குடகு நாட்டைச் சேர்ந்தவர். பிரிட்டிஷ் பேரரசின்கீழ் பல சிக்கலான போர்முனைகளில் வெற்றிமுரசு கொட்டியவர். அரசியல் நுணுக்கமும், நல்ல அனுபவமும் உள்ளவர்.

சீனப்படைகளின் தொல்லை வடகிழக்கில் இருந்துகொண்டிருக்கும்போது இந்தியப் படை வீரர்களில் 3000 பேரைக் காங்கோவிற்கு அனுப்பக் கூடாது என்கிறார் கரியப்பா! எதையும் அரசியல் செல்வாக்கிற்காகவே செய்துகொண்டு போனால், உண்மை நிலைகளைச் சந்திக்க முடியாமற்போகும். இதனால் பாதிக்கப்படுகிறவர்கள் பொது மக்கள். ஆகவே இந்தியா எல்லைப் பிரச்னைகளில் இன்னும் அதிகப் பொறுப்புடன் நடந்து கொள்ள வேண்டும்! எல்லை

(11-ம் பக்கம் பார்க்க)

# பச்சையப்பன் கல்லூரிக் கவியரங்கம்

முகில்

**தலைவர் : கண்ணதாசன்**

## புன்முறுவல்

திருவடியின் பொற்சிலம்பு ஆர்ப்பஆர்ப்ப
உருவிடையின் மேகலைதான் மின்னமின்ன
அரும்பன்ன கைவளைகள் கலகலக்க
கழுத்திலே மணிமாலை அழகுகூட்ட
சுரும்புசேர் குழல்தாழும் காதோரத்தில்
குண்டலங்கள் மின்விளங்க உலகையாளும்
குறளெடுத்த செங்கோலின் மாட்சிஓங்க
திறம்பெற்றுத் தமிழ்த்தாயே வாழ்கவம்மா!

தேரார்ந்த வீதியெலாம் தமிழின்ஓசை
தழைத்தோங்கத் தானுழைக்கும் புலவர்கூட்டம்
ஏரார்ந்துபெருக என்று எழும்பித்துள்ளும்
இதயத்தால் தமிழ்த்தாயே! கரங்குவித்தேன்
திருவார்ந்த அறிவுவளம் காணவேண்டும்
தமிழர்குலம் உலகிடையில் ஓங்கவேண்டும்
எனவார்ந்த நன்னோக்கின் வழியேவந்த
பச்சையப்பர் நல்லேந்தல் கனவுவெல்க!

களிக்கும் வண்டு கள்ளுண்ணக்
காமர் தென்றல் அலர்தூற்றக்
துளிர்க்கும் முல்லை தான்சிரிக்கும்
புலவன் முறுவல் தனைநினைத்துப்
பனித்தேன் துளிகள் ஆர்ந்திருக்கும்
பசுங்கால் ஆம்பல் நிழல்காட்டும்
அருவிக் கரையை அடைந்திருந்தேன்
வாழ்வின் நிழலை நான்கண்டேன்.

ஈன்றெடுத்தாள் என்னன்னை என்னகண்டாள்
என்வாயில் முறுவல்தனை இனிதுகண்டாள்
இன்பம்கண்டாள் வாய்முறுவல் கண்டநானும்
கொண்டதுஓர் முறுவலுண்டு; கள்ளமில்லை
அடிவைத்தேன் பள்ளியிலே ஆங்குக்கண்டேன்
அன்பர்களின் மென்முறுவல் அறிவின்சாயல்
துடிதுடிக்கும் பருவத்தே ஓடியாடும்
நண்பர்களின் பொன்முறுவல் பலவும்கண்டேன்

நன்மைசெயும் நல்லறிவின் திறத்தைக்காட்டி
நாடோங்கத் தானுழைக்கும் ஆசிரியன்தன்
கல்லாத சிறுமக்கள் தம்மைக்கண்டு
கனிந்துருகும் கண்பார்வை இழைந்துஓடும்
அருளார்ந்த தவழ்முறுவல் கண்டுநெஞ்சம்
ஆராதகாதலொடு அடங்கி வாழ்ந்தேன்
கருவார்ந்த மடமையிருள் நீங்கநானும்
கல்லூரி வாழ்வினிலே காலைவைத்தேன்

கல்லூரி வாழ்வதனிற் கண்டதெல்லாம்
களங்காணத் துடிக்கும்நல் வீரவாழ்வு
தவறுசெய்வார் தாமுணர்ந்து தாழ்ந்துநிற்பார்
தமைப்பொறுக்கும் தமிழ்முறுவல் அங்குக்கற்றேன்
இல்வாழ்வு இன்பவாழ்வு அல்லஅல்ல
பெரும்புயலின் படகோட்டம் எனத்துணிந்து
துன்பத்தைச் சாடஎழும் வீரமுறுவல்
கற்றுணர்ந்தேன் வெளிப்போந்தேன் காதல்கண்டேன்.



**ஆக்கியோன்: மு. நரசிம்மன்**

கற்றவித்தை சிலவுண்டு காதல்வித்தை
கற்றுதந்த தெத்தனையோ; எண்ணவில்லை
காதலிதன் கனிமுறுவல் கற்றுத்தந்த
துணைமுறுவல் வலியோர்ந்தேன்; நாடுகாட்டும்
இழிமுறுவல் தனைநகைத்தேன் வாழ்வுகொண்டேன்
இன்முறுவல் பலவற்றை இணைந்துகண்டேன்
இணையில்லை எங்களுக்கு என்றுஎண்ணிக்
களிமுறுவல் கொள்காலம் கழிந்துசெல்ல.

வாழ்வினிலே தவறுநிலை பலவுமுண்டு
அந்நிலையில் நானிருந்த சிலதாள்தம்முள்
அழகினிலே கவர்ச்சியிலே என்னவுண்டு?
அறிவினுக்கும் உணர்வினுக்கும் ஏதுமுண்டா?
எனஎடுத்துப் பாருங்கள் என்றுசொல்லி
எழில்முறுவல் காட்டிநிற்கும் பிணையைக்கண்டு
பீடுற்ற முறுவல்கொளும் நிலையைஎண்ணி
யான்கொள்ளும் தெளிமுறுவல் எனக்கேஇன்பம்.

உலகியலைத் தான்காட்டும் நிலைகள்தம்முள்
பலமுறுவல் யான்கண்டேன் அவற்றுள்எந்தன்
நன்மக்கள் புகழ்முறுவல் கொள்ளும்போது
யான்கொள்ளும் மகிழ்முறுவல் எந்தன்வெற்றி
எனஎண்ணி ஆழ்ந்திருந்தேன் எனையுணர்ந்தேன்
எத்தனைதான் நான்கண்ட முறுவலப்பா!
அத்தனைக்கும் எனைவதைக்கும் ஒரேமுறுவல்
ஏழைகளின் ஏமாற்றத் துன்பமுறுவல்.

காலம்வரும் இதுமாறும் என்றுஎண்ணிக்
கண்தூக்கி நான்பார்த்த காலந்தன்னில்
ஆம்என்று கலந்துவந்த தென்றற்காற்றில்
ஆம்பல்வாய் முறுவல்செய்து தலையசைக்க
எழுந்திருந்தேன் இல்லம்நோக்கி நடந்துவந்தேன்
எழிற்குழவி குறுமுறுவல் தன்னைக்கண்டேன்
ஏன்?என்ன சிந்தனையோ? என்றஎந்தன்
ஏந்திழைதன் முகம்பார்த்து முறுவல்பூத்து.

வேர்வைநீர் வழித்துவிடும் உழவன்வாயில்
நெளியுமவ்வுழைப் பின்சின்னம் முறுவல்கண்டு
வரும்வழியில் என்வாழ்வை எண்ணிப்பார்த்தேன்
வாழ்வினிலே என்னகண்டோம், முறுவலல்லால்
எதுவுமில்லை எனஎடுத்துச் சொன்னபோது
வாழ்விதுதான் நகைப்புக்கே இடமாயிற்று
எனவிளம்பி எழிற்பற்கள்நிலவு கால
ஒளிவிளங்கு கண்களோடு முறுவல்பூத்தாள்!

"போற்றுபவர் போற்றட்டும்; புழுதி வாரித்
தூற்றுபவர் தூற்றட்டும்; தொடர்ந்து செல்வேன்
ஏற்றதொரு கருத்தை என(து) உள்ளம் என்றால்
எடுத்துரைப்பேன்; எவர்வரினும் நில்லேன்; அஞ்சேன்!"

# எண்ணம்

மலர் 7 | 1-4-'61 | இதழ் 41

## நச்சுப்பல் முளைக்கிறது!

உலகிலுள்ள ஏகாதிபத்திய ஆட்சியாளர்கள் அவர்களுடைய ஆதிக்கம் நிலைத்திருப்பதற்கு என்னென்ன கொடுமைகளை-கொடிய சட்டங்களின் மூலம்-கையாளுவார்களோ, அத்தனையும் கையாளுவதற்கு இந்தி ஏகாதிபத்தியமும் தொடங்கி விட்டது!

இந்தியத் துணைக்கண்டம், பல்வேறு மொழி, நாகரிகம், பண்பாடுகளைக் கொண்ட பல்வேறு தேசிய இனங்களைத் தன்னகத்தே கொண்டது.

இந்த உண்மையை எத்தனைமுறை-எத்தனைவிதத்தில்-மறைத்தாலும், மறைக்க முடியாமல் வெளிப்பட்டு வருவதைக் கண்கூடாகக் காண்கிறோம்.

ஏகாதிபத்திய ஆட்சியாளரின் செய்திப் படத்தயாரிப்புகளிலிருந்து, குடும்பக் கட்டுப்பாட்டுத் திட்டம்-ஐந்தாண்டுத் திட்டங்கள் வரை, திராவிடத்திற்கு ஒருவிதமாகவும் வடநாட்டுக்கு வேறுவிதமாகவும் இருந்து வருவது உலகறிந்த செய்தியாகி விட்டது.

இதுவரை கேளாக் காதினராக இருந்தவர்கள் கூட வடக்கு தெற்கு வேற்றுமைகள் பற்றிக் கேட்கும் காதினராக மாறி வருகிறார்கள்-கேட்டுத் தீர வேண்டிய அளவுக்கு நிலைமை ஆளாக்கி வைக்கிறது.

"தமிழ் நாட்டுக் கொட்டகைகளில் செய்திப் படங்களைப் பார்க்கும்போது 'பாரத்' எனப்படும் இந்தியாவில் மொத்தம் பதினைந்து ராஜ்யங்கள் இருக்கின்றனவா. அல்லது, இரண்டு மூன்றுடன் சரியா என்ற சந்தேகம் எழும். தான்சேன் திருவிழாவையும் ஹோலி நிகழ்ச்சிகளையும் அதில் காணலாம். ஆனால், கம்பன் விழாவையோ பொங்கல் நிகழ்ச்சிகளையோ காண முடியாது. விந்திய மலைக்கு இப்பால் குறிப்பிடத்தக்க நிகழ்ச்சிகள் எதுவுமே நடைபெறவில்லையோ என்ற சந்தேகம்தான் எழும்"

பிரிட்டிஷ் ராணியின் தமிழ்நாட்டு வருகையை சரியானபடி செய்திப் படத்தில் இடம் பெறாமல் செய்த ஏகாதிபத்திய ஆட்சியின் ஓரவஞ்சனையை தமிழ் மக்களுக்குத் தெரியாமல் மறைப்பதற்காக மந்திரி சுப்பிரமணியம் அந்தச் செய்திப்படத்தை உடனடியாக திரையிட வேண்டாம் என்று காலவரம்பின்றி ஒத்தி வைக்க உத்தரவிட்டார்- அதனைப் பாராட்டு முகத்தான் ஆனந்தவிகடன் கூறிவரும் சில சொற்களையே மேலே எடுத்துக்காட்டி இருக்கிறோம்.

ஆனால், ஆனந்த விகடன்களுக்கு தேவையான அளவு காதுகேட்பதாகவோ, கண்ணொளி இருப்பதாகவோ, காட்டிக் கொள்ள விரும்பவில்லை என்று, அதன் தொடக்க உரைகளைக் காணும்போது கருத வேண்டியதாய் இருக்கிறது.

"தென்னாடு புறக்கணிக்கப் படுகிறது. ஒரு கண்ணுக்கு வெண்ணெய் மற்றொரு கண்ணுக்குச் சுண்ணாம்பு என்ற முறையில்தான வடக்கையும் தெற்கையும் மத்திய சர்க்கார் கவனிக்கிறது என்ற கூக்குரல் பலகாலமாகத் தமிழ் நாட்டில் இருந்து வருகிறது.

இதற்கு வடநாட்டில் இயற்கை வளமும் கனிவளமும் நீர்வளமும் மிகுந்திருக்கிறது. எனவேதான் பல முன்னேற்றத் திட்டங்கள் அங்கு உருவாகின்றன. தென்னாட்டின் நிலை அப்படி இல்லையே, அதற்கு நாங்கள் என்ன செய்வது? என்ற சமாதானமும் அவ்வப்போது கூறப்பட்டு வருகிறது, இதில். வாதத்திற்கும் நியாயத்திற்கும் இடமிருக்கிறது.

ஆனால், மற்றப் பலதுறைகளிலும் இந்தப் பாகுபாடு மனப்பான்மை இருந்து வருவதைப் பார்க்கும் போதுதான், உண்மையிலேயே நாம் புறக்கணிக்கப்பட்டு வருகிறோமோ, என்ற ஐயம் தென்னாட்டு மக்களுக்கு எழுகிறது"

இந்த சொற்றொடர்கள் ஆனந்தவிகடன்களின் காது கண்களிலுள்ள குறைபாடுகளைக் காட்டுகின்றன.

"தென்னிந்தியாவில் நிலவளம் நீர்வளம் கனிவளம் இல்லாததற்கு நாங்கள் என்ன செய்வது?' என்ற, பொறுப்பற்ற வாதத்தை, ஒருபுடை ஆதரிப்பதிலிருந்தே, விகடன்கள் போதிய அளவுக்குத் தெளிவு பெறவில்லை என்று, துணிந்து கூறலாம்.

ஆயினும், வடவர் ஏகாதிபத்திய ஆட்சியின் வஞ்சனைப்போக்கு, இந்த அளவுக்காவது விகடன்களின் காதுகண்களைத் திறந்து விட்டிருப்பது, மகிழ்ச்சி தருவதாகவும், வஞ்சனைப் போக்கின் வரம்புகடந்த நிலைமைக்குச் சான்றாகவும் அமைந்திருக்கிறது,

இத்தகைய உரிமை உணர்ச்சியை—அதன் வளர்ச்சியை, அடக்கி நசுக்குவதற்கு கொடிய சட்டங்களை உருவாக்கிக் கொண்டிருக்கிறது வடவர் ஏகாதிபத்தியம்!

கடந்த 29-3-61-ம் நாள் பாராளுமன்றத்தில் காலஞ்சென்ற பந்துவின் இடத்தில் வந்திருக்கும் உள்துறை மந்திரி, திரு. இலால் பகதூர் சாத்திரி என்பார் வெளியிட்டிருக்கும் செய்திகள், திராவிட முன்னேற்றக் கழகம் போன்ற தேசிய விடுதலை இயக்கங்களுக்கு வெடிவைத்துத்தீர்க்கும் கருத்துக் கொண்டவைகளாய்த் தோன்றுகின்றன.

"வகுப்புக் கலகங்களை உண்டு பண்ணுவோர்; தேசிய ஐக்கியத்தைச் சிதைப்பவர்கள்; ஆகியோர் மீது, ஆள் தூக்கிச் சட்ட (இதன் மறு பெயர் தடுப்புக் காவல் சட்டம்)த்தை பிரயோகிக்க சர்க்கார் உத்தேசிக்கிறது'

என்று கூறியிருக்கிறார் சாத்திரியார். தொடர்ந்து சொல்லியிருக்கிறார்:—

"சமூக விரோதிகள் மீதும், வகுப்புக்கலகங்களை உண்டு பண்ணுவோர் மீதும், தடுப்புக் காவல் சட்டத்தின் கீழ் நடவடிக்கை எடுப்பதற்கு உங்களுடைய ஆதரவை நான் பெற்றிருப்பதாக எண்ணுகிறேன்" என்று சாத்திரியார் கூறியபோது, அங்குள்ள மரத்தலைகள் அத்தனையும் கை கொட்டி ஆரவாரம் செய்தனவாம்!

சமூக விரோதிகள்—வகுப்புக் கலகம் புரிவோர் மீது நடிவடிக்கை எடுத்தால் தி. மு. க வுக்கு என்ன வந்தது? என்று கருதலாம்.

சமூக விரோதிகள், வகுப்புக் கலகம் புரிவோர் என்று, யார் யாரைக் கருதுகிறார் என்பதை சாத்திரியாரின் பேச்சு தெளிவு படுத்துகிறது:

"நாட்டின் பல துறைகளில் பிரிந்து போகும் சக்திகள் தீவிரமாகக் காணப்படுகின்றன. மொழிப் பிரச்னை; சிறுபான்மையோர் பிரச்னை; எல்லைத் தகராறுகள்; ஆகிய விஷம சக்திகள் தலை தூக்கினால், அபாயகரமான வினைவுகள் ஏற்படும்" இது, அவருடைய வெறி மொழிகளில் முக்கியமானது.

"நாட்டின் நலனுக்குத் தீங்கு ஏற்படும் வகையில் நமது மாகாணம் நமது மக்கள் என்று கருதுவது கூடாது" இது, அவருடைய வெறியுணர்ச்சியில் வெளி வந்த உபதேசம்!

இதிலிருந்து, தேசிய விடுதலை இயக்கங்கள் தீமை வளர்ப்பன என்று கூறி, நாட்டின்நலன் என்றபேரால், இந்திய ஏகாதிபத்திய ஆதிக்கத்தை நிலைப்படுத்த, கீழ்த்தரமான கெடுபிடிகளும், கொடிய தண்டனைகளும் நடைமுறைக்குக் கொண்டுவரப்படும் என்று, தெளிவாகிறது.

தென்னிந்தியா அரசியல் அறிவும் தேசிய உணர்வும் பெறாத—ஏமாந்த காலத்தில், பிரிட்டிஷ் ஏகாதிபத்திய வெறுப்புணர்ச்சி ஒன்றையே அரசியல் என்றும், தேசியம் என்றும், நம்பச் செய்து. அதன் தொடர்ச்சியில் பிரிட்டிஷ் ஏகாதிபத்தியம் அகன்றவுடனே, வடவர் ஏகாதிபத்தியத்தை அமைத்துக் கொண்டார்கள்—சாத்திரியார்கள்!

இந்த உண்மைகள் சிறுகச் சிறுக உணரப் பட்டு வருவதன் அறிகுறியே. ஆனந்த விகடன் போன்ற ஏடுகளில், என்றைக்காவது ஒருநாள், பட்டும் படாமலும் 'வடக்கு தெற்கு' என்று எழுதப்படுவது!

"தென்னாட்டு மூடர்கள் இதையெல்லாம் கண்டுகொள்ள முடியாது" என்கிற இறுமாப்பிலேயே கடந்த 14 ஆண்டுகாலமும் இந்தி ஏகாதிபத்தியம் இருந்து வந்தது. விடுதலையியக்கங்கள் வளர்ந்து வரும் வேகத்தைப் பார்த்தபிறகு, ஏகாதிபத்திம் சரிந்துவிடும் என்ற அச்சம் துளைக்கிறது என்பதை சாத்தியாரின் பேச்சு தெளிவு படுத்துகிறது.

வகுப்புக் கலவரம்-வகுப்புவாதம் என்பது வேறு, தென்னாடு வடநாடு என்பது வேறு, என்ற அரசியல் தத்துவத்தை நாட்டுமக்களுக்கு இந்த நேரத்தில் ஒளிவேகத்தில் உணர்த்த வேண்டிய பொறுப்பு தி. மு. கவைச் சேர்ந்திருக்கிறது.

அதே நேரத்தில், தென்னாடு ஒரு தனித் தேசிய இனமக்கள் வாழும்நாடு; தன்னாட்சி உரிமை பெறத் தகுதி உடையநாடு; என்ற உண்மையை ஆனந்த விகடன் போன்ற பிரபல ஏடுகள் உணரவும்-பிறருக்கு உணர்த்தவும் கடமைப்பட்டிருக்கின்றன. 'ஏனோ தானோ' என்று, பட்டும் படாமலும் எழுதுவதால் பயன் என்ன?

இத்தகைய உணர்வுகள் காலங் கடந்து தோன்றுவதாலும் பயனில்லை. இந்தி ஏகாதிபத்தியம் கொடுங்கோன்மை என்னும் நச்சுப்பல்லால். தேசிய சக்திகளை ஒடுக்குவதற்கு முன்னால், நாட்டு மக்களை, தன்னாட்சி உரிமைப் போருக்குத் தயார் செய்து தீரவேண்டும். இங்கோர் அல்ஜீரியா தோன்றினாலும் கூட அஞ்சாமல் அசையாமல் ஈடுகொடுக்கும் வலிமை ஏற்படச் செய்ய வேண்டும்

"இந்திய யூனியன் அரசாங்கத்திலுருந்து தனியொரு நாடோ, சிலநாடுகளோ பிரிந்து, தமக்குள் கூட்டாட்சியோ, தனித்தனி சுயாட்சியோ, ஏற்படுத்திக் கொள்ளலாம். ஆனால், அத்தகைய பிரிவினை பத்து ஆண்டு காலத்திற்கு மேல்தான் அனுமதிக்கப்படும்"

என்கிற அரசியல் நிர்ணயச் சட்டம். இந்தி ஏகாதிபத்திய வெறியர்களால் காலில் போட்டு மிதிக்கப்படுகிறது. காரணம்: அந்தச் சட்டத்தைச் சுட்டிக் காட்டுமளவுக்கு தேசிய விடுதலை இயக்கங்கள் வலிமை பெறாமல் இருப்பதே.

'பிரிந்துபோகும் சக்திகளுக்கு இடமளிக்க முடியாது—அபாயமானது" என்றெல்லாம் உள்நாட்டு மந்திரி என்பவர் பாராளுமன்றத்தில் வெறிமுழக்கம் செய்கிறார். அத்தகைய தரம் குறைந்தவர்கள் கையில் நாம் சிக்கிக் கொண்டிருக்கிறோம், என்பதை. எண்ணும்போது குருதி கொதிக்கிறது.

"பிரிந்துபோக விரும்பும் தனி தேசிய இனமக்களை தடுத்து நிறுத்த நீ யார்?" என்று கேட்க நாதியில்லை. பாராளுமன்றத்தில் அரசியல் அறிவற்ற தற்குறிகள் நிறைந்து கிடக்கிறார்கள்.

விவசாயம், பெருந்தொழில், ஏற்றுமதி இறக்குமதி வாணிபம், இந்தியத் துணைக்கண்டத்தின் பேராதிக்கம், இந்தி அரசாங்க மொழி. இத்தனையும் வடநாட்டானுக்கு பெரும்பான்மை என்கிற பேரால் கிடைத்திருக்கின்றன.

பெரும்பான்மை சிறுபான்மை என்பது பலவகைத் தேசிய இனமக்களுக்கிடையில் பேசப்படுவதல்ல-அதுவல்ல ஜனநாயகம். இந்த சாதாரணத் தத்துவம் கூட இங்குள்ள பிரபல அரசியல் வாதிகளுக்குத் தெரிவதில்லை,

வடநாட்டு வளத்திற்காக—வடநாட்டான் பட்ட கடன்களை அடைக்க வரி செலுத்துதல், வடநாட்டில் தயாராகி வரும் ஆலைத்துணிகள் உணவுத்தானியம், சோப்பு முதல் சீப்பு வரை உற்பத்தியாகிவரும் சாமான்கள் ஆகியவற்றை வாங்கி திராவிடத்தைச் சந்தை யாக்குதல். ஆட்சி பீடத்திலெல்லாம் வட நாட்டானே அரசு வீற்றிருத்தல். இவைகளே, திராவிடத்திற்கு உரிமையாக இருக்கும் வடவர் கண்ட ஜனநாயகம் என்பது இப்போதே வெட்ட வெளிச்சமாகத் தெரிகிறது.

எம். எஸ். இராமசாமி.

# தலையாலங்கானத்துப் போர்

"புலிப்பாணி"

பணைத்ததிண்டோள். பால்வடியும் முகம். அரும்பிவரும் சிறு மீசை. ஆழ்ந்த கல்வி கேள்வியால் அறிவுச்சுடர் வீசும் மதர்த்த கண்கள். அறமும் மறமும் இணைந்து தோன்றும் அரசர்க்கே உரித்தான முகப்பொலிவு. அத்தனையும் ஒருங்கே அமையப் பெற்ற வன் பாண்டியன் நெடுஞ்செழியன். அவனது தந்தையார் காலமாகி விட்டதால், இளம்பருவத்திலேயே பாண்டிநாட்டு வேந்தர் வேந்தனுக முடிசூட்டப்பட்டான். அப்போது அவனுக்கு வயது பதினேழு. ஆண்டு பதினேழு என்ருலும், அறிவால் 1700 வயது மதிக்கத்தகுந்தவன், பாண்டியன் நெடுஞ்செழியன். ஒருநாள்:

**காட்சி 1.**

காலம் : விடிந்து பத்து நாளிகை.

களம் : பாண்டியன் நெடுஞ்செழியன் அரசவை.

இருப்போர் : புலவர் மாங்குடி மருதனுர், படைத்தலைவர் உக்கிர வீரபாண்டியர், அமைச்சர்கள், மற்றும் பல புலவர்கள் - சான்ருேர்கள். வீற்றிருக்கின்றனர் அப்போது ஒற்றர் ஒருவர் வந்து அரசனை வணங்குகிருர்.

நெடுஞ் : "வருக ! இடைக்குன்றூர் கிழார் வருக ! முடிசூட்டு விழா முடிந்து, அயல்நாட்டுப் பயணம் சென்ற நீவிர், எங்கெங்கு சென்றீர் ? என்னென்ன கண்டீர் ?"

இடைக் : "வேந்தர் வேந்தே ! சோழவள நாட்டுக்குப் போனவன், அங்கிருந்து ஓட்டமும் நடையுமாக மீண்டு வந்தேன்..."

நெடுஞ் : (வியப்புடன் அவையோரைப் பார்த்து) நமது நயத்தகு நாவலர் வியத்தகு செய்தியுடன் வந்திருக்கிருர் !

இடைக் : ஆமாம் அரசே !

நெடுஞ் : தடையின்றிக் கூறலாமே !

இடைக் : தனித்து...!

நெடுஞ் : (கோபச்சிரிப்புடன்) இந்த நிறைமன்றம் அறியாத மறை (இரகசியம்) ஒன்றும் இல்லையே ? நாட்டைக் காட்டிக்கொடுப் போர் எவரேனும் இம்மாமன்றத்தில் இடம் பெற்றிருப்பதாக இடைக்குன்றூரார் எண்ணுகிருரா ?

இடைக் : இல்லை அரசே ! ஆராயாமல் கூறியதைப் பொறுத்தருள வேண்டும். பேரவையீர் ! பொறுத்தருள வேண்டும்.

நெடுஞ் : புலவர்பிரானே ! பொறுத்தருள என்ன இருக்கிறது ? குற்றம் ஒன்றுமில்லை ! ஒற்ருடிக் கண்ட பொறுப்புணர்ச்சியில், இம்மாமன்றத்தின் தகுதியை மறந்துவிட்டீர் ! மறதி ! அவ்வளவுதான் ! செய்தியைக் கூறலாம் !

இடைக் : சோழர்கள் படை திரட்டுகிருர்கள் அரசே !

நெடுஞ் : எந்த நாட்டின்மேல் படை எடுக்க ?

இடைக் : (தயக்கத்துடன்) பாண்டிய...நாட்டில் !

[சிறிதுநேரம் அமைதி நிலவுகிறது]

படைத்தலைவர் உக்கிர வீரபாண்டியர் : புலவரே ! நடுகற்களும் சேர்த்தே திரட்டுசிருர்களா ?

[மீண்டும் அமைதி நிலவுகிறது]

இடைக் : (அரசனைப் பார்த்து) அரசே! சேரர்களும் சோழர்களுடன் சேர்ந்திருக்கிருர்களாம் !

நெடுஞ் : அவ்வளவுதானு ?

இடைக் : ஐந்து வேளிர்களும் துணைநிற்கிருர்களாம் அரசே !

படைத்தலைவர் : கோழைகள் ! வங்கம், கலிங்கம், மராடமெல்லாம் சேர்க்கவில்லையா ?

நெடுஞ் : உக்கிரவீரபாண்டியரே ! நமது ஐவகைப் படைகளையும் ஆயத்தப்படுத்துங்கள்.

உக்கிர : ஐவகைப் படையென்ருல், கப்பற்படையும் சேர்த்தா சொல்கிறீர்கள் அரசே !

நெடுஞ் : ஆமாம் பாண்டியரே !

உக்கிர : அரசே ! சேர, சோழ, வேளிர்கள்: தேர், குதிரை, யானை, காலாள், ஆகிய நால்வகைப் படை மட்டுமே நடத்தத் தெரிந்தவர்கள். அவர்களிடம் போர்க்கப்பலே கிடையாதே. நாம் ஏன் கப்பற்படையை ஆயத்தப்படுத்த வேண்டும் ?

நெடுஞ் : படைத்தலைவரே ! தாங்கள் என்னைவிட அறிவால், அனுபவத்தால், வயதால் எல்லாவற்ருலும் முதிர்ந்தவர்கள் ! நீங்களே இப்படிக் கேட்கும்போது, நான் என்ன செய்வது ? சொல்கிறேன் ! எங்காவது ஒரு நாட்டின்மேல் ஏழுபேர் சேர்ந்து படையெடுத்தது உண்டா ?

படைத்தலைவர் : இல்லை அரசே ! இல்லை !! எனக்கும் வயது ஐம்பது வரை ஆகிறது. இப்படிக் கேள்விப்பட்டதுகூட இல்லை !

நெடுஞ் : நல்லது ! நீங்கள், எரிச்சலுடன் இடைக்குன்றூராரைக் கேட்டீர்களே: "வங்கம் கலிங்கம் மராடமெல்லாம் சேர்க்க வில்லையா ?" என்று. அதுபோல், நாம், தரைப்படைகளுடன் போராடும்போது, வங்கத்துக் கடற்படையோ, கலிங்கத்துக் கடற்படையோ, நமது கொற்கை, தொண்டி முதலிய துறை முகங்களை முற்றுகையிட்டால் என்ன செய்வது ?

படைத்தலைவர் : அரசே ! சிந்திக்க வேண்டிய செய்திதான் ! இந்தப் போர் நெறிதவறிய பாவிகள் எதுவும் செய்வார்கள் ! எதிர்பார்க்க வேண்டியதுதான் !

[தூதன் ஒருவன் வந்து நெடுஞ்செழியனை வணங்கு கிருன்]

நெடுஞ் : யார் நீ?

தூதன் : அங்கம் வங்கம் கலிங்கம் கடாரங்கொண்டு இமயத்தில் புலிக்கொடி நாட்டிய திரிபுவனச் சக்கரவர்த்திகள் சோழப் பெருவேந்தரின் திருமுகம் தாங்கிவந்த தூதன்.

[சொல்லிக்கொண்டே திருமுகத்தை நீட்டுகிருன் அமைச்சர் கோக்கோதையார், அரசரின் சார்பில் அந்தத் திருமுகத்தை வாங்குகிருர்.)

அமைச்சர் : (தூதனிடம்) நீ போகலாம் !

[தூதன் வணங்கிவிட்டுப் போகிருன் அமைச்சர் திருமுகத்தைப் படிக்கிருர்]

அங்கம் வங்கம் கலிங்கம் கடாரம் கொண்டு இமயத்தலையில் புலிக்கொடியாட சோழமண்டலக் கொற்றக்குடை நிழலில் வீற்றிருக்கும் திரிபுவனச் சக்கரவர்த்திகளால், தமது சார்பிலும், தம்மைச் சார்ந்திருக்கும் சேர நன்னுட்டுப் பெருவேந்தருடன் ஐம்பெருவேளிர்கள் சார்பிலும், விடுக்கும் திருமுகம்:

பாண்டிய சிம்மாசனத்தின் காவலாக இருக்கும் காவலனே !

அறிவாலும் ஆற்றலாலும் ஆண்மையாலும் மறத்தாலும் திறத்தாலும் அறத்தாலும் சிறந்தவர்கள் முடியுடை வேந்தர் மூவர் என்பது உலகறிந்த ஒன்று.

படைமறமும் கொடைவளமும் அறியாத நீ, சுவடியேந்திப் பள்ளியில் அமரவேண்டிய நீ, செங்கோல் ஏந்தி சிங்காசனத்தில் அமர்ந்திருப்பதும், எங்களை யொத்த பேரரசனுக உன்னையும் சேர்த்து உலகத்தார் பேசுவதும், நகைக்கத்தக்கதாய்—எம் போல்வாருக்குத் தலையிறக்கம் தருவதாய்—இருக்கின்றது. யாம் இனியும் பொறுத்துக்கொண்டிருப்பதாயில்லை.

இத்திருமுகம் கண்ட மூன்று நாளைக்குள் மதுரை வடபால் தலையாலங்கானத்துள்ள நமது பாசறையில், நீ உன் அரச விருதுகளுடன் வந்து பணிந்து, ஆண்டுதோறும் வரும் பாண்டிமண்டல அரசிறை வருமானத்தில் ஆறில் ஒரு பங்கு திறை செலுத்தி, சோழமண்டலத் திரிபுவனச் சக்கரவர்த்திகளின் ஆட்சிக்கும் ஆதரவுக்கும் உட்பட்டு அரசு செலுத்துவாயாக.

தவறினுல், இது கிடைத்த மூன்ரும் நாள், பாண்டிமண்டலத்து மீன்கொடி பறக்கும் இடமெல்லாம் புலிக்கொடி பறக்கும் என்பதையும், வாள்முனையில் உனக்கு வானுலகு வழங்கப்படும் என்பதையும் அறிவாயாக.

ஒப்பம்

**திரிபுவனச்சக்கரவர்த்திகள்.**

அமைச்சர் திருமுகத்தைக் கிழித்துத் தூர எறிந்தார். அவையில் பேரமைதி குடிகொண்டது. படைத்தலைவர் உக்கிர வீரபாண்டியரின் கண்கள் இரண்டும் கோவைப் பழம்போல் சிவக்க, மீசை, படபடவென்று துடிக்க, உறையிலிருந்த வாளை ஒரு முழம் வெளியில் இழுத்து, ஆத்திரத்தோடு வேகமாக மீண்டும் உள்ளே தள்ளிவிட்டு பல்லை 'நறநற'வென்று கடித்தார்.

பாண்டியன் நெடுஞ்செழியன் முகத்தில் எந்த மாறுதலும் இல்லை. படைத்தலைவர் பல்லை 'நறநற'வென்று கடித்தபோது அவனது திருவாயில் புன்னகை ஒன்று மின்னல்போல நெளிந்து மறைந்தது. உடனே சிம்மாசனத்தில் எழுந்து நின்ருன். படைத்தலைவர், அரசன் குறிப்பறிய விரும்பி, அவன் பக்கம் திரும்பினுர்.

நெடுஞ் : படைத்தலைவரே ! நால்வகைச் சேனைகளும் தலையாலங்கானம் நோக்கி நடக்கட்டும். துறைமுகங்கள் தோறும் கடற்படைகள் காவல் புரியட்டும். போர்முரசம் இப்போதே ஒலிக்கட்டும்.

(9-ம் பக்கம் பார்க்க)

# கென்யாவின் உதயசூரியன்

உடுமலை - பண்ணன்

இருபதாம் நூற்றாண்டு உலகத்தில் அடிமைப் பிடியில் சிக்கித் தவித்த நாடுகளுக்கு ஓர் விடி வெள்ளியாகும். காலத்தின் விளைவால் பிற நாட்டவரின் காலடிகளில் அடிபட்டு மிதிபட்டுக் கிடந்த பல நாடுகள் தம்மைப் பீடித்திருந்த அடிமைத் தளையை அறுத்தெறிந்து, ஆதிக்க வெறியை அகம்பாவத்தை நொறுக்கித் தம் உரிமையை நிலை நாட்டி விளங்குகின்றன. இந்த நூற்றாண்டு உலக வரலாற்றிலே பெரியதொரு திருப்பத்தை விளைவித்திருக்கிறது.

குறிப்பாக இருண்ட கண்டமென வரலாற்றிலே அழைக்கப் பெற்ற ஆப்பிரிக்கப் பெருநிலம் தனது ஒவ்வொரு முனையிலேயும் வலிய பகைவர்களைச் சந்தித்துக் கொண்டிருக்கிறது. அந்த மண்ணுக்குச் சொந்தக்காரர்களின் நெஞ்சங்களில் தாங்கள் நூற்றாண்டுகளாக அனுபவித்து வந்த கொடுமைகளுக்கு ஒரு முடிவு கட்டத் துணிவு பிறந்துள்ளது. பரந்த பெரிய நிலப் பரப்பில் அன்னிய ஆதிக்கத்தை வேரறுப்பதற்காக அடிமையெனும் கொடிய சொல்லை அழித்து அதன் மீது உரிமை எனும் சொல்லை பொறிக்கத் துடிக்கிறது. இருண்ட கண்டமென்ற பெயரைத்தன் கருப்பு மக்கள் சிந்தும் செந்நீரால் சிவந்த கண்டமாகிக் காட்சி யளிக்கும் நிலைமையை உருவாக்கியிருக்கிறது. துப்பாக்கி முனையால் மீண்டும் கருமையாக மாற்ற ஆதிக்க புரியினர் முயலும் பொழுதெல்லாம் இடையறாது தங்கள் இரத்தத்தைச் சிந்தி மாறாத செந்நிறத்தை விளக்கிய வண்ணமே இருக்கின்றனர் அம்மக்கள்.

இங்ஙனம் இடையறாது நடைபெற்றுவரும் விடுதலைப் போர்க்களங்களில் குறிப்பிடத் தக்கது **கென்யாவாகும்.** அங்கு எழுந்த உரிமை எண்ணமெனும் சுடர் காட்டுத் தீயெனப் பரவியது. பயங்கர உருவெடுத்தது. 'ஒரு நாட்டின் விடுதலைக்கு விடுதலை வீரர்களின் இரத்தம் மட்டுமல்ல ஆதிக்க வெறியர்களின் இரத்தமும் தேவைப்பட நேரிடலாம்' என்றோர் அறிஞன் கூறினான். கென்யா நாட்டு இளைஞர் உள்ளத்தில், பகைவரின் இரத்த வெள்ளத்தினாலே ஆதிக்கக் கோட்டையைத் தகர்க்கச் செய்ய வேண்டுமென எண்ணும் கட்டம் ஒன்று பிறந்தது; வளர்ந்தது; இன்னும் வாழ்கிறது.

அந்தப் புரட்சிக் கருத்துப் பதிந்து வளர்ந்த வேளையில் ஆப்பிரிக்கப் பெருநிலம் மட்டுமல்ல உலகத்திலுள்ள அத்தனை நாடுகளும் திடுக்கிட்டன. குறிப்பாக பிற மண்ணைத் தம் அடியின் கீழ்க்கொண்டு சுரண்டி வாழ்ந்து வந்த ஐரோப்பிய நாடுகளுக்கு கடுமையான அச்சம் பிடித்தது. வெள்ளையர்களும் ஆப்பிரிக்க மக்களின் நல்வாழ்வுக்குக் குறுக்கிடாய் இருப்போரும் கடுமையாகப் பலிவாங்கப்பட்டனர். புரட்சி இயக்கங்கட்கு சிகரமான அந்தக் கென்யா மக்களின் இயக்கத்திற்கு **'மாவ் மாவ்'** என்று பெயர்.

பலப் பல விளைவுகளுக்குப் பின்னர் கென்யா நாட்டிற்கு ஒளி பிறக்கும் நாள் நெருங்கி வருகிறது. இன்னும் சில கிழமைகளில் விடுதலை பெற இருக்கும் கென்யாவின் புதிய சட்டமன்றத்தை அங்கு வாழ் ஆப்பிரிக்க மக்கள் உருவாக்க வேண்டியுள்ளது. அதற்கான உறுப்பினர்களைத் தேர்ந்தெடுக்க வேண்டிய பொறுப்பும் அவர்கள் கையிலேயே காத்துள்ளது. பெரும்பான்மையானோர் ஆப்பிரிக்கர்களாக உள்ளபடியால் அவர்களுக்குள்ளேயே ஒரு தலைவர் தேர்ந்தெடுக்கப் படுவார் என்பது வெள்ளிடைமலை.

எனினும் அங்கு வெள்ளையரும் ஆப்பிரிக்கர் அல்லாத பிறரும் சிறுபான்மையினராக உளர். இச்சிறுபான்மையினரிலிருந்து ஒருவரை ஆட்சி மன்றத்திற்குத் தலைவனாகத் தேர்தெடுப்பது நடவாத செயலாகும்.

ஆப்பிரிக்க மக்களின் தேர்ந்தெடுக்கப்படும் தலைவன் கென்யா நாட்டின் சகல தரப்பு மக்களையும் அணைத்துச் செல்லக் கூடியவனாக இருக்கவேண்டுமென உலகம் எதிர்பார்க்கிறது. அப்படிப்பட்ட தலைவன் அமைவது அவ்வளவு எளிதல்ல தன் இன மக்களின் நலத்தையே நாடும் தலைவன் தேர்ந்தெடுக்கப் பட்டால் மற்ற சிறுபான்மையினரின் எதிர்காலம் கொடுமையானதாக இருக்கும். இப்படிப்பட்ட சிக்கலொன்று கென்யா தன்னை நெருங்கும் நல்ல எதிர்காலத்தில் சந்திக்க வேண்டியுள்ளது.

ஆனால் கென்யாவாழ் ஆப்பிரிக்க மக்களின் உரிமைச் சுடர் விளக்கை ஏற்றிவைத்த மாபெரும் தலைவன் **ஜோமோ கென்யாட்டா** இன்னும் விடுதலைபெறவில்லை. நாடுவிடுதலை பெறும் நேரம் நெருங்கும் வேளையில் அந்தப் பணியின் முதல்மகன் சிறைக்கூடத்தில் அடைபட்டுக் கிடக்கிறான். 'மாவ்-மாவ்' புரட்சி இயக்கத்திற்குக் காரணமான அறிவும், ஆற்றலும், அரசியல் தெளிவும் உரிமை வேட்கையும் பெற்ற அவனை விடுதலை செய்து அப்பிரச்னையைச் சமாளிக்க வாய்ப்பளிக்கலாமா என்கிற கருத்து வெள்ளையர்களின் மனதில் நிலவி வருகிறது.

செயல் வலிமையும் பேச்சுத்திறமையும் உடைய ஆப்பிரிக்க மக்களின் ஒப்பற்ற வழிகாட்டி - கென்யா நாட்டின் அடிமை இருளைக் கிழித்தழிக்கஎழுந்த 'உதயசூரியன்' **ஜோமோ கென்யாட்டா** 1952-ம் ஆண்டு அக்டோபர் திங்கள் 21ம் நாளன்று 'மாவ்-மாவ்' இயக்கத்திற்குப் பொறுப்பாளி என்கிற குற்றச் சாட்டின் பேரில் கைது செய்யப்பட்டான். நவம்பர் திங்களில் விசாரணை எனும் கண் துடைப்பு நாடகமாடி 1953-ம் ஆண்டு ஏப்ரல் திங்களில் ஏழு ஆண்டுகள் சிறைதண்டனை அளித்தார்கள். விசாரணையின் போது 'அந்த இயக்கத்தின் நடவடிக்கைகளின் முன்னோடியாகவும், அவன் அதில் நேரடித் தொடர்பு கொண்டும் இருந்தான் என்பது வெளியாக்கப் பட்டது. அதிகாரிகளுக்குக் கென்யாட்டாவின் மேல் இருந்த பொறாமையெல்லாம், 'மாவ் மாவ்' இயக்கம் வெள்ளையருக்கு எதிராக தீவிரப் பாதையில் ஈடுபட்டிருந்த போது அதை எதிர்த்து எதுவும் கூறவில்லை என்பதுதான். **கென்யாட்டாவின்** ஒரு சொல்லே அந்தப் பயங்கர விளைவுகளைத் தடுப்பதற்குப் போதுமானதாகுமென அவர்கள் முழுதும் நம்பினர். அவன் விரும்பினால் ஆப்பிரிக்க மக்களின் வெறியுணர்ச்சியைச் சில நிமிடங்களில் நிறுத்திவிட முடியும் எனக் கருதினர். அவர்களுடைய நம்பிக்கைக்கும் கருத்துக்கும் மாறாகக் **கென்யாட்டா** இருந்து விட்டதால் தான் கென்யா மண்ணில் அத்தகைய அச்சம் மலிந்த செயல்கள் வளர்ந்து இன்று வரை ஓய்ந்த பாடில்லை.

**கென்யாட்டாவின்** தண்டனைக் காலம் முடிந்தும் கூட இன்னமும் நாட்டின் எல்லைப் பகுதியிலே தடுத்து வைக்கப்பட்டுள்ளான். ஆப்பிரிக்கத் தலைவர்கள் அனைவரும் கென்யாட்டாவின் விடுதலையில் ஆர்வம் கொண்டிருக்கின்றனர். கென்யாட்டாவைத் தவிர, வேறு யாராலும் அந்த நாட்டில் அமைதியையும் ஒழுங்கையும் நிலைநாட்ட முடியாது என்ற உறுதியான நம்பிக்கை அவர்கள் உள்ளத்தில் ஊன்றிக் கிடக்கிறது. அம்மக்களை நடத்திச் செல்லும் தகுதியும் திறமையும் அவனிடமே உள்ளது.

**கென்யாட்டா** நீக்ரோ இனத்தின் ஒரு பிரிவான **கிக்குயு** (Kikuyu) வகுப்பில் தோன்றியவன். மற்ற ஆப்பிரிக்க மக்களைப் போலவே **நைரோபி** நகருக்கு அருகிலுள்ள சிற்றூரில் மூங்கில் தட்டிகளால் அமைக்கப் பெற்ற குடிசையில்தான் பிறந்தான். அவன் பிறந்த நாளைப் பற்றித் தெளிவாகத் தெரியாது; ஆனால் அரசியலாரின் குறிப்புகளில் **1893**-ம் ஆண்டில் பிறந்ததாகக் குறிக்கப் பெற்றுள்ளது கிருத்துவ மதக் குழுவினரால் பள்ளியில் சேர்த்தபொழுது அவனை அநாதை என்றே கூறினர்.

ஜோமோ சிறுவனாக இருந்த போது தனது தந்தையுடன் வில்லையும் அம்பையும் தாங்கி, தங்களுடைய கால் கடைகளைப் சிங்கம், சிறுத்தை ஆகியவைகளிடமிருந்து காப்பாற்றும் பணியில் ஈடுபட்டிருந்தான். அவனுடைய பாட்டனார் ஒரு மந்திரவாதி. பல சமயங்களில் பாட்டனாருடன் தனது இன மக்கள் வாழும் பகுதி முழுதும் சுற்றியிருக்கிறான். நிலத்தின் பல பகுதிகளையும் சுற்றி அங்கே தன் இனத்தவரின் கீழான நிலையைக் கண்டு அதன் விளைவாக அவர்களுக்கு விமோசனத்தைத் தேடித் தர வேண்டுமென்ற எண்ணம் இளமையிலேயே ஏற்பட்டிருக்கலாம்.

கிருத்துவ மதக் குழுவினரால் நடத்தும் பள்ளியில் பயிலுங்காலத்தில் ஜோமோ **பழைய ஏற்பாட்டில்** இறைவனைப் பற்றிக் கூறப்பட்டுள்ள கருத்துக்களுக்கும் தனது இனத்தவர் கொண்டிருக்கும் கடவுட் கொள்கைக்கும் பெரும் வேறுபாடு இல்லாமையை உணர்ந்தான். அதனால் கிருத்துவ மதத்தில் சேருமாறு கேட்டவுடனேயே தான் ஒப்புக் கொண்டான். அவனுடைய முதற் பெயர் ஜோமோ (Jomo) என்பது. அவனது தாய்மொழியில் ஜோமோ என்றால் 'எரிகின்ற வேல்' (Burning Sphere) எனப் பொருள்படும். மதக் குழுவினரோ **'ஜான்ஸ்டன் காமாவ்'** Johnstone Kamau) எனப் பெயரிட்டனர்.

பின்னர் அவன் பருவமெய்தி உலகியல் அறிவும் தனது இன மக்களின் நிலையுணர்வும் பெற்றதும் தன் பெயரைத் தன்னுடைய தாயகப் பெயரின் அடிப்படையில்-தாயகப் பற்றினையும் அவன் நல்வாழ்வையும் மனதில் கொண்டு **'கென்யாட்டா'** (Kenyatta) என மாற்றிக் கொண்டான். பள்ளிப் படிப்பு முடிந்ததும் ஜோமோ நைரோபி நகராட்சி மன்றத்தில் ஒரு எழுத்தனாகப் பணியேற்றான். பிறகு மேற்பார்வையாளனாக உயர்வுபெற்றான். ஆனால் ஜோமோ தன் இன மக்கள் ஒளியணைந்து, வாழ வழியிழந்து, தாழ்வும் தளர்வும் சுற்றிக் கிடக்க வீழ்ந்து துடிப்பதை அறிந்து பொது வாழ்வில் அக்கறை கொண்டு உழைக்க முன் வந்தான்.

பிறந்த பொன்னாட்டுப் பெருங்குடியினர் வளங்கொஞ்சும் செல்வங்களை இயற்கையன்னை நெஞ்சுவந்துஅளித்திருந்தும் வந்தவர்க்கு வாய் பொத்திக் கைகட்டி உழன்று உயிர் வாழ்வதை மாற்றியாக வேண்டுமென்ற மனவுறுதி பூண்டான். சொந்த முடையவர் நொந்து கிடக்கவும் வந்து சேர்ந்தவர் தின்று கொழுப்பதோடு மீளா அடிமைகளாக ஒதுக்கப் பட்டவர்களாக ஒடுக்கப்பட்டுக் கிடப்பதைக் கண்டு மனம் நைந்தான். இனியொரு மார்க்கத்தைத் தேடித்தருவதே தலையான பணியெனத் துணிந்தான்.

1922-ல் அவன் கிக்குயு தலைமைச் சங்கத்தின் பொதுச் செயலாளனானான். அதே ஆண்டில் கிக்குயு இன மக்களின் முதற் பத்திரிகையான (Muigwithamia) முய்க்வித்தாமியாவைத் துவங்கினான். அதனுடைய முதல் நோக்கம் கென்யா காலனி ஆதிக்கத்தின் கீழ் கொண்டு வரப்பட்ட பொழுது தனது இனத்தவர் இழந்த நிலங்களை மீட்டுத் தருவதற்காக பொது மக்களின் குறிப்பாக கிக்குயு இனத்தவரின் பொது நோக்கத்தைப் பண்படுத்தி வளர்ப்பதாகும். கெனிவாவிலிருந்த அத்தனை நிலங்களும் வெள்ளையர்களுக்குச் சொந்தமாக இருந்தது.

கென்யத் தாயகத்து மக்கள் தங்கள் வாழ்வில் பெற இருக்கும் முழு விமோசனமும் நிலங்களை முதலில் மீட்டுத் தருவதிலேதான் இருக்கிறதென்று கென்யாட்டா நம்பினான்.

அதோடு அத்தூயவன், **'சுதந்திர கிக்குயு பள்ளிக்கூடக் கழக'மெனும்** அமைப்பின் மூலம் பல இடங்களில் பள்ளிகளை அமைத்தான். அவற்றில் கிக்குயு இனத்தின் மொழி, கலை, நாகரிகம் இவற்றைக் கற்றுத் தருவதின் மூலம் தேசிய உணர்வு பெற வழி வகுத்தான்.

நிலச் சீர்திருத்தத்தின்பால் ஜோமா கொண்டிருந்த பேரார்வம்

(10-ம் பக்கம் பார்க்க)

# கில்லாடி முத்தன் எம்.எல்.ஏ.

"அருப்பை கிழார்"

—சென்ற இதழ்த் தொடர்ச்சி—

ஆனல், கில்லாடியின் உள்ளத்தில் தருணதந்திரத்தின் செல்வ வாழ்வு பற்றிய பொருமையும் தருணதந்திரத்தின் உள்ளத்தில் கில்லாடியின் புகழ் பற்றிய பொருமையும் காலக்கிரமத்தில் எப்படியோ முளைவிட்டிருந்தன.

ஆயினும் அந்தப் பொருமைகள் அவர்களின் நட்பைப் பாதிக்கக்கூடிய அளவில் விகார உருவம் பெருமல் 'ஒருவருக்கொருவர் துணையாக இருப்பது நல்லது' என்ற அளவிலேயே பயிர்களுக்கிடையே களையும் இருப்பது போல் இருந்தன.

ஒரு நாள் கில்லாடியும் தருணதந்திரமும் பேசிக்கொண்டிருந்தார்கள். அப்போது பேச்சுப் போக்கில் தருணதந்திரம் கேட்டார்;

"தம்பி, உனக்கு வயது முப்பதுக்கு மேல் ஆகுமல்லவா !"

"இருக்கும் !"

"திருமணம் செய்துகொள்ள வேண்டும் என்கிற ஆசையில்லையா ?"

"(சற்று நாணத்துடன்) அதுக்கெல்லாம் நம்ப கிட்ட என்ன வசதி இருக்குதுங்க ?"

"திருமணம் செய்துகொள்ள வசதி என்ன வேண்டும். பெண் தருவதற்கு மட்டும் யாராவது இருந்தால்... போதுமே !'

"வீடு வாசல் வருமானம் இல்லாதவனுக்கு யாருங்க பெண் கொடுப்பா ?"

"சரி ! நான் முயற்சி செய்து பார்க்கிறேன் ! சொந்தத்திலே யாராவது வைத்திருக்கிருர்களா ?"

"எனக்குத் தாய் மாமன் ஒருத்தர் இருக்காருன்னும் அவரு கிட்டக்கூட பெண்ணிருக்கின்னும். எங்கப்பா ஒரு தடவை சாகு முன்னலே சொல்லி இருக்காரு ! ஆன, அந்தப் பெண்ணெல்லாம் இப்போ கட்டிக் குடுத்து குழந்தை குட்டியா இருப்பாங்க !"

"சரி ! வேறே யாராகிலும்...சொந்தத்திலே...?"

"அப்பாகூடப் பிறந்த அத்தை இருக்கா ! அவகிட்ட பெண்ணிருக்கோ...இல்லையோ ! ரொம்ப நாளா அப்பா சாக முன்னலே இருந்தே... அவங்களுக்கும் எங்களுக்கும் ஒரு தொடர்பும் இல்லே .. அதனலே தெரியலே...!"

"அவர்கள் எந்த ஊரில் இருக்கிருர்கள் என்பதாவது தெரியுமா ?"

"சாத்தூருக்கிட்ட ஏழாயிரம்பண்ணையின்னு சொன்னதாக ஞாபகம். நான் போனதில்லேங்க..."

"ஏழாயிரம் பண்ணை ! அங்கே காங்கிரஸ் கமிட்டி இருக்கலாம் ! எல்லாம் நான் விசாரிக்கிறேன் !"

கில்லாடி திருமணமே முடிந்துவிட்டதுபோல் பூரித்துப் போனுன். அந்த மகிழ்ச்சியின் நிறைவினல், அதற்கு மேல் அவனல் பேசிக்கொண்டிருக்க முடியவில்லை. மெதுவாக அவரிடம் விடை பெற்றுக்கொண்டு நகர்ந்தான்.

உள்ளத்தில் இன்ப வெள்ளம் கரை புரண்டோட, எதிலும் மனம் செல்லாதவனுய் நேரே வீடு போய்ச் சேர்ந்தான் கில்லாடி.

இவன் அங்கே போய்ச் சேருவதற்கு முன்னலேயே அவன் வீட்டு வாசலில் கார் ஒன்று நின்றுகொண்டிருந்தது. நாகரிக நங்கை ஒருத்தி காருக்கு வெளியில் நின்று மற்ருெரு பெண்ணுடன் பேசிக்கொண்டிருந்தாள். காருக்குள் வலவன் (Driver) அமர்ந்திருந்தான்.

அந்த இரண்டு பெண்களையும் பார்த்தவர்கள், நாகரிக மங்கை—காரில் வந்தவள், அயலூர்க்காரி என்றும். கூடப் பேசிக் கொண்டிருப்பவள் உள்ளூர்க்காரி என்றும், கில்லாடி முத்தனைத் தேடி வந்து காத்திருப்பவளிடம் உள்ளூர்க்காரி பேசிக்கொண்டிருக்கிருள் என்றும், ஐயமில்லாமல் சொல்லமுடியும்,

கில்லாடியின் தலை தெரிந்தவுடனே உள்ளூர்க்காரி நாகரிக மங்கையிடம் கையால் சுட்டிக்காட்டி ஏதோ சொல்லிவிட்டு நகர்ந்தாள். அதே நேரத்தில் கில்லாடியும் வீட்டு வாசலில் போய் நின்ருன்.

அவன் வந்தவுடனே அந்த நாகரிக நங்கை. அவனிடம் சங்கோசம் கிறிதுமின்றி நெருங்கி, நாடகப் பாணியில் பேச ஆரம்பித்தாள் :—

சார் ! வணக்கம். சாரவர்களைக் காண்பதற்காகத் தேடிவந்து காத்திருக்கிறேன்" என்ருள்.

பதிலுக்கு வணக்கம் சொன்னவுடன் ஒரு கணம் திகைத்து நின்ருன் கில்லாடி.

இவள் யாராயிருக்கலாம் ? நம்மைத் தேடி வந்திருக்கும் காரணம் என்னவாயிருக்கும் ? என்று சிந்தித்தான். ஒன்றும் புரியவில்லை. அவளிடம் எப்படிப் பேசுவதென்றே புரியாமல் திகைத்தான். முகத்திற்குப் பொடி பூசி புருவத்தை எழிலுறத் திருத்தி மையூட்டிய கண்களும், உதயமான இளஞ்சூரியன் போல தீட்டிய அழகிய செஞ்சாந்துத் திலகம் ஒளிவீச இலங்கும் நெற்றியும், காதுகளில் தொங்கிக் கொண்டிருந்த செயற்கை வைரத் தொங்கல்கள் ஊசலாட உதட்டில் பூசிய சிவப்புச் சாயம் பளபளக்க அழகுத் தெய்வம் போல் இருந்தாள். அவள். இறுக்கமாகப் பூட்டப்பட்டிருந்த சோளிக்கை இரவிக்கை, இப்போதோ—சிறிது நேரத்திற்குள்ளோ 'பிரிப்பிதிர்ந்துவிடும்' என்று கருதும்படி, அதனுள் கட்டுண்டு கிடந்த திரண்டு குவிந்த மார்பகங்கள், பெண்மையின் ஆரவாரம் போல் முன்னேறி நிற்க, காலில், மெருகேற்றிய-- சிறிதே குதிஉயர்ந்த 'சிலிப்பர்கள்' கண்ணுடிபோல் வெயிலின் ' பிரதிஒளி காட்டிக் கொண்டிருக்க, அவள் நின்ற நிலை, அவனைத் திக்கு முக்காடச் செய்தது.

கில்லாடி இதுவரை இப்படிப் பட்ட ஆடம்பரமான பெண்களுடன் பேசியறியாதவன். மிகமிகச் சாதாரண வாழ்விலே வளர்ந்த அவனுக்கு, இயற்கையாகவே இருந்த தாழ்வு மனப்பான்மையும், கல்வியில்லாததால் 'யாரிடத்திலாவது எதிலாவது சிக்சிக் கொள்ள நேரிட்டு அவமானப்பட வேண்டிவருமோ' என்கிற அச்ச உணர்ச்சியும் சேர்ந்து, அந்த நாகரிக மங்கை முன்னல், ஒரு கணம் அவனைக் கூனிக் குறுகச் செய்து விட்டன.

ஒருவாறு சமாளித்துக் கொண்டு "நீங்கள்............?" என்ருன் கூச்சத்தால் அவனுக்குப் பேசவே நாவெழவில்லை ! ஆனல், அந்த நாகரிக மங்கை தேறித் தெளிந்தவளாக இருந்தாள் ! அவன், கூச்சத்தால் குழம்புவதை நொடியில் புரிந்து கொண்டு "நான்தான் மதுரை, கோகிலகானம். திலோத்தமா தேவி ! கேள்விப்பட்டிருக்கிறீர்களோ ?' என்ருள். அவள் குரல் கூச்சம், நாணம், எதுவும் இன்றி கம்பீரமாக ஒலித்தது.

"அப்பிடியா ? கேள்விப் பட்டிருக்கேன்!" என்ருன் கில்லாடி ஒப்புக்காக. தொடர்ந்து :

"அடடே...நின்னுக்கிட்டே...பேசறகளே ! வாங்க வீட்டுக்குள்ளே போய்ப் பேசுவோம் ! என்று சொல்லிவிட்டுக் கதவைத் திறக்கப் போனுன்.

கதவைத் திறக்கும்போது "மதுரை, கோகிலகானம் திலோத்தமா தேவி" என்று மெதுவாக வாய்க்குள்ளே உச்சரித்துப்பார்த்தான். அந்தப் பேர் சரியாக உச்சரிக்க வரவில்லையே என்று வருந்திக் கொண்டே கதவைத் திறந்தான்.

அந்த வீடு சூதாட்ட காலத்திற்கு முன்னல் இருந்தது போல் குப்பை கூளம் இல்லை. வீட்டின் தளம் காங்ரீட் போடாத வெறும்தரையாக இருந்ததால் மாட்டுச்சாணியால் மெழுகிச் சற்று தூய்மையாக இருந்தது.

ஆனல், பெரும்பொழுது அடைபட்டுக் கிடக்கும் வீடாக இருந்ததால் கதவைத்திறந்தவுடன் மெழுகிய சாணியின் நாற்றமும் காற்ருேட்டமில்லாத புழுக்கத்தின் நாற்றமும் சேர்ந்து ஒருவித வெப்பமான துர்நாற்றம் வீசிக் கொண்டிருந்தது.

அந்த துர்நாற்றத்தை முதலில் உணர்ந்தவள் திலோத்தமாதேவிதான். எனவே, அவள் சிறிது முகத்தைச் சுழித்தாள். கில்லாடிக்கு அது. பழக்கமான நாற்றமாக இருந்ததாலும், இப்போது அவனுடன் நிற்கும் திலோத்தமா தேவியின் கூந்தலில் சூடியிருந்த மலர்மணம் வீட்டில் பரவி நின்றதாலும் அவன் தனது வீட்டில் துர்நாற்றம் இருப்பதாக உணரவே இல்லை.

உள்ளே நுழைந்த இருவரும் ஒரு கணம் நின்ருர்கள்.

இப்போது ' திலோத்தமா தேவியை எதில் உட்காரச் சொல்வது" என்று கில்லாடியின் உள்ளத்தில் மனப்போராட்டம் ஏற்பட்டிருந்தது.

ஏனென்ருல், கில்லாடியின் வீட்டில் நாற்காலியோ, பெஞ்சோ, எவ்வித ஆசனமும் கிடையாது. திலோத்தமா தேவியோ, கில்லாடியின் கண்களுக்கு, புராணங்களிற் கூறிய திலோத்தமையாகவே, தோன்றினுள்; அவளைத் தரையில் உட்காரச் சொல்லலாமா ? அவள்தான்—அவ்வளவு விலையுயர்ந்த சீலையை உடுத்துக் கொண்டிருப்பவள் தரையில் உட்காருவாளா ? தன்னுடைய ஏழ்மைநிலை அவளுக்கு வெட்ட வெளிச்சமாகத் தெரிந்து விட்டதே என்று நினைக்கும் போது அவனுக்கு எண்சாண் உடம்பும் ஒரு சாணுகக் குறுகியது.

அவனுடைய மனப்போராட்டத்தை ஒருவாருக ஊகித்துணர்ந்த, திலோத்தமா "அந்த வீட்டில் ஏதாவதுகிடைக்காதா ?" என்று தனது அகன்ற விழிகளை ஏவித்துழாவினுள். சுவரும் ஓடும் சந்திக்கும் 'வள்ளிடை'யில் ஒரு கோரைப் பாய் தூக்கி வைக்கப் பட்டிருந்ததை அவளுடைய கூரிய கண்கள் ஒரே நொடியில் அவளுக்கு அறிவித்தன.

அவளே முந்திக் கொண்டு "ஏன் நிற்க வேண்டும் ? இதோ அருமையான கோரைப்பாய் இருக்கிறதே !" என்று, அதை எடுக்கப் போனுள்.

கில்லாடிக்கு மனப்போராட்டம் ஒருவாறு விலகித் தெம்பு பிறந்து.

"இருங்க...இருங்க...நான்... எடுக்கிறேன் ! தூசியும் குப்பையுமா இருக்கும் ! உங்க சீலையிலே விழுந்து அசிங்கமாகிடாமே !" என்று சொல்லிக் கொண்டே கோரப்பாயை எடுத்து, வெளியிற் கொண்டு போய்உதறிவிட்டு வந்து விரித்தான். அந்தப்பாயின் நடுவில், அரையடி அகலம், ஓர் அடி நீளம், கோழிமுட்டை வடிவத்திலிருந்த ஒரே பீற்றல் தவிர, அதிகம் பீற்றல் இல்லை !

பாயை விரித்தவுடன் ' ஏன் நிற்கிறீங்க உட்காருங்க !" என்ருன்.

"பரவாயில்லை! நீங்கள் உட்காருங்கள் நான் நிற்கிறேன்" என்ருள் அவள்.

"ஃங்...வந்தவங்களை...நிற்க வச்சிட்டு...நல்லா...சொன்னீங்க ... உங்

களுக்காகத்தானே பாயை...நான் கீழ கூட...உட்கார்ந்திருப்பேனே ... சும்மா உட்காருங்க...ஏழைங்க வீடு...இப்பிடி தான் இருக்கும்'' என்று, அன்பொழுக நாணம் குறுக்கிட தட்டுத் தடுமாறிச் சொன்னான்,

''சரி. நீங்கள் இவ்வளவு சொல்லும்போது நான் என்ன செய்ய முடியும்? நீங்களும் உட்காருங்கள். நானும் உட்காருகிறேன் '' என்றாள்.

இருவரும் பாயில் அமர்ந்தனர். இப்போது அவளுக்கு என்ன பேசுவதென்று புரியவில்லை! ஒரு கணம் திகைத்துப் போய் இருந்தாள்,

கில்லாடிக்குக் கூச்சம் ஒருபுறம் இருந்தாலும், பேசாமல் உறைந்து கிடப்பது என்னவோ போல் இருந்தது. ஆகவே சமாளித்துக் கொண்டு பேச்சை ஆரம்பித்தான்.

'நீங்கள் ..இந்த......ஏழையோட குடிசைக்கி ... வந்தது''

எல்லாரும் ஏழைகள்தான்! ''சார் அவர்களைப்பார்த்து ஒரு உதவி கேட்கலாமென்று வந்தேன்''

''நான் என்ன...உதவி செஞ்சிடுவேன்...உங்களுக்கு ?''

''அதென்ன அப்படிச் சொல்கிறீர்கள்! நாடே உங்களைப் புகழ்கிறது...? மதுரையில் உங்களைக் கண்ணால்கண்டு தரிசிக்க எவ்வளவு பேர் காத்திருக்கிறார்கள் என்று தெரியுமா உங்களுக்கு ?'

''என் பிழைப்பு...தெரியாதவங்களாயிருக்கலாம்! தெரிஞ்சா...பூ'ண்ணிருவாங்க ..நீங்கதான் பார்க்கிறிங்களே என் வீடு வாசல் எல்லாம்...!''

''அதனால் என்ன? குப்பையில் கிடந்தாலும் மாணிக்கம் மாணிக்கம் தானே! மாணிக்கத்தின் மதிப்பு மாணிக்கத்திற்குத் தெரியாது என்று பெரியவர்கள் சொல்லுவார்கள்! உங்களைப் பார்த்த பிறகுதான் பெரியவர்கள் சொல்லுவது எவ்வளவு சரியாய் இருக்கிறதென்று தெரிகிறது!''

அவள் இவ்வளவு புகழ்ந்து கூறிய பிறகு, முத்துசாமிக்கு 'புளகாங்கிதம்' ஏற்பட்டு விட்டது என்றே கூறலாம். அவன், முகமலர்ச்சியுடன் பேச ஆரம்பித்தான். ஆனால், திலோத்தமா போல் கணீரென்று கொச்சையில்லாமல் பேச முடியவில்லையே என்கிற வருத்தமும் நாணமும் அவனுக்கிருந்த கொஞ்ச நஞ்சப் பேச்சு நயத்தையும் கெடுப்பதாயிருந்தன.

எனவே, உற்சாகம் இருந்தாலும் கலகலப்பான பேச்சு வரவில்லை. சற்று திக்கித் திகைத்துச் சொன்னான்.

''சரியம்மா...நான் என்ன செய்யணும்'னு சொல்ல'லையே! சொல்லுங்க என்னாலே முடியும்னா செய்யறேன்'' என்றான்.

''ஒன்றுமில்லை நான் ஒரு பிரபல நாடக நடிகை. அதோடு நாட்டியம் தெரியும்! சங்கீதம் தெரியும்!! நாடகங்களில் 'ஸ்திரிபார்ட்' போடுவேன். திருமணவீடுகளில் நடனக்கச்சேரி சங்கீதக்கச்சேரிகளுக்கும் போவேன். கொஞ்ச நாளாக இந்தக் கலைகள் தேடுவாரில்லாமல் கிடப்பதால் அவற்றைத் தொழிலாகக் கொண்ட நான் மிகமிகச் சிரமப்படுகிறேன்,—

இப்போது, சினிமாவிலே பேசுகிற படம் வந்திருக்கிறதல்லவா! சென்னையிலே இப்போது அப்படிப்பட்ட படங்கள் தயாரிக்கிற கம்பெனிகளை ஏற்படுத்தி இருக்கிறார்கள்.

அந்தக் கம்பெனிகளில் ஒன்று 'அரோகரா பிக்சர்ஸ்' என்பது. தஞ்சாவூர் சாம்பமூர்த்தி ஐயருக்குச் சொந்தமானதாம். சாம்பமூர்த்தி ஐயர் கம்பெனியில் இப்போது ''தாராசசாங்கம்'' என்கிற படம் எடுக்கப் போகிறார்களாம். அந்த சாம்பமூர்த்தி ஐயர், புதுக்கோட்டை புண்ணிய மூர்த்தி ஐயருக்கு அத்திம்பேராம்-நிரம்ப வேண்டியவராம்.

புண்ணியமூர்த்தி ஐயர் காங்கிரசுத் தலைவர்களிலே ஒருத்தர் என்பது தங்களுக்குத் தெரியும்!

புண்ணிய மூர்த்தி ஐயரிடம் சிபார்சுக் கடிதம் வாங்கிக் கொண்டு போனால் 'தாராசசாங்கம்' படத்திலே நடிகையாகச் சேரலாம் என்று விவரம் தெரிந்தவர்கள் சொன்னார்கள்.

நீங்கள் எனக்காக சிபார்சு செய்தால் 'புண்ணியமூர்த்திஐயர் 'அரோகரா பிக்சர்ஸ்' சாம்பமூர்த்தி ஐயருக்குச் சிபாரசு செய்வார் என்றும் சொன்னார்கள். நீங்கள் சிரமம் பாராட்டாமல் என்மேல் கருணை கூர்ந்து, புண்ணிய மூர்த்தி ஐயரிடம் சிபார்சு செய்ய




வேண்டும் இதற்காகத்தான் நான் வந்தேன். நீங்கள் மறுக்காமல் தயவு காட்ட வேண்டும்''

இவைகளை ஒரே மூச்சாக புல்லாங்குழலும் யாழும் இணைந்து முரலுவது போன்ற குரலில் சொல்லி முடித்தாள் திலோத்தமா.

அவள் சொல்லிவந்த அத்தனையும் கேட்ட பிறகு கில்லாடிக்குத் தலையே சுற்றுவதுபோல் தோன்றியது. காரணம் இதுதான்:

புதுக்கோட்டை புண்ணிய மூர்த்தி ஐயர் என்று கேள்விப்பட்டிருக்கிறானே தவிர, அவரை அவன் பார்த்ததுகூட இல்லை. இந்த நிலைமையில் தன்னையே நம்பி இத்தனைதூரம் வந்தவளிடம் 'தன்னால் ஆகாத காரியம்' என்று கூறினால் அவளுக்கு எவ்வளவுஏமாற்றமாக இருக்கும் என்று எண்ணும்போது அவன் ஒன்றும் சொல்லத் தெரியாமல் திண்டாடினான். இளம் வயதிலிருந்து பிறர் ஏவினவேலைகளை—எடுபிடி அலுவல்களைச்செய்து செய்து பழக்கப்பட்ட அவனுக்கு சற்று கௌரவமான இந்த வேண்டுகோளை நிறைவேற்ற முடியவில்லையே என்ன செய்வது என்று ஏங்கினான்.

எனக்குப் புண்ணிய மூர்த்தியையும் தெரியாது பாவமூர்த்தியையும் தெரியாது என்று உதறிவிட்டால், அவள் நம்பக்கூட மாட்டாள் என்று அவன் உள்ளுணர்வு அவனுக்குக் கூறிக் கொண்டிருந்தது.

அத்துடன் இத்தனை அழகும் இனிமையான பேச்சும் கொண்ட அவளிடம் 'என்னால் முடியாத காரியம்' என்று கூறி அதனால் அவள் அடையும் மனவேதனையால், அவளது மலர் முகத்தில் ஏற்படும் சோகம்-ஏமாற்றம்-ஆகியவற்றைக் காண்பதே ஒரு கொலைபாதகச் செய்கைபோல் அவன் உள்ளுணர்வில் தோன்றியது.

எனவே, அவன் தலையைக்கவிழ்ந்து கொண்டே ஆழ்ந்த சிந்தனையில் இருந்தான். தருணதந்திரம் பிள்ளையிடம் சொன்னால்? அவருக்கு ஒரு வேளை புண்ணியமூர்த்தி ஐயரைத் தெரிந்திருக்கலாமல்லவா! சே! சே!! ஒரு நாடகக்காரிக்காக இவ்வளவு சிரத்தை எடுத்துக் கொண்டு வந்து விட்டானே என்று தாழ்வாகக் கருதிவிட்டால்...?

இப்படி மனப் போராட்டத்திற்கிடையே நீண்ட நேரம் இருந்தான். எதிரில் அமர்ந்திருந்த கோகிலகானத்திற்கு அவன் தலையைக் கவிழ்ந்து கொண்டு பித்தம் பிடித்தவன் போல் இருந்தது பெரிதும் ஏமாற்றத்தை அளித்தது. 'முடியாது' என்று சொல்லி விடுவானோ என்கிற ஏக்கத்துடன் அவனது முகத்தையே பார்த்துக் கொண்டிருந்தாள்.

நேரம் அதிகமாகிவிடவே பொறுமை இழந்தவளாய் அவனுடைய சிந்தனையைக் கலைத்தாள்:

''சார் அவர்கள், என்ன அப்படி திகைத்துக் கொண்டிருக்கிறீர்கள்? என்னடா முன்னும் பின்னும் தெரியாத யாரோ ஒருத்தி—நாடகக்காரி வந்து, இத்தனை பெரிய உதவி கேட்டுத் தொல்லைப் படுத்துகிறாளே என்று, ஆலோசிக்கிறீர்களோ? நான் உங்களுடைய உதவியை என்றுமே மறக்க மாட்டேன்!'' என்று சொல்லிக் கொண்டே கில்லாடியின் இரண்டு கைகளையும் பிடித்தாள்.

எதிர்பாராத இந்தச் செய்கையால் முத்துசாமி அதிர்ந்தே போனான். சிந்தனையில் மூழ்கி இருந்த அவனை செங்காந்தள் போன்ற கரங்களால் திலோத்தமா பற்றியவுடனே, மின்னாற்றல் தாக்குண்டவன்போல் உணர்வழிந்து இருந்தான். ஒருவாறு சமாளித்துக்கொண்டு

''அம்மா, நீங்கள் கேட்கிற உதவியைச் செய்யக் கூடாது'ண்ணு நான் யோசிக்க'ல்லே! எனக்குப் புண்ணிய மூர்த்தி ஐயரோட பழக்கம் கிடையாது! அதோட நான் சாதாரணமானவன் அவங்க பெரியவங்க! நான் சொன்னாக் கேட்பாங்களா'ண்ணுதான் யோசிக்கிறேன்!' என்றான்.

''இதற்குத்தானா இத்தனையோசனை? புண்ணிய மூர்த்தி ஐயரைத் தெரியாவிட்டால் என்ன! தினசரி உங்களுடைய பேர் பத்திரிகையிலே வருவதை அவர் தெரிந்துதான் இருப்பார். அதோடு அவர் காங்கிரசுமேல் மிகுந்த பற்றுள்ளவர். காங்கிரசுத் தியாகிகள் என்றால் உயிரையே கேட்டாலும் தருவார் என்று நான் கேள்விப்பட்டிருக்கிறேன், ஆகையினால் நீங்கள் அவரோடு நேரடியாகப் பழகியிருந்தால்தான் நீங்கள் சொல்வதைக் கேட்பார்—செய்வார் என்று நினைக்கவேண்டியதில்லை.

நான் கார் கொண்டு வந்திருக்கிறேன். இரண்டு பேரும் நேரே புதுக்கோட்டைக்கே போவோம், நீங்கள் மட்டும் அவரிடம் கூசாமல் ''நான் தான் கில்லாடி முத்துசாமி'' என்று சொல்லுங்கள். கட்டாயமாக அவர் உங்களுடைய வார்த்தைகளை மதித்துக் கேட்பார்—செய்வார் என்று நான் உறுதியாக நம்புகிறேன்.

அப்படியில்லாமல் அவர் மறுத்து விடுவதாகவோ, தட்டிக் கழித்து விடுவதாகவோ இருந்தால், அதற்காக நான் உங்கள் மீதோ அவர் மீதோ வருத்தப்படமாட்டேன். நீங்கள் எனக்காக சிரமம் எடுத்துக்கொண்டதை மறக்கவும் மாட்டேன்.

நீங்கள் இதற்காக ஒன்றும் யோசிக்க வேண்டாம். இப்போதேபுறப்படுவோம். வாருங்கள் என்று, அவசரப் படுத்தினாள் திலோத்தமா.

கில்லாடியால் அதற்குமேல் ஒன்றும் பேச முடியவில்லை. பேசாமல் எழுந்து அவள் பின்னாலேயே வந்து காரில் உட்கார்ந்தான்.

கார் புதுக்கோட்டை நோக்கிப் பறந்தது. கார் போகும்போது கில்லாடியின் உள்ளத்தில் பலவித சிந்தனைகள் ஓடிக்கொண்டிருந்தன. அதில் முக்கியமானது ''பத்திரிகையில் தினசரி உங்கள் பெயர் வந்துகொண்டிருக்கிறது'' என்று திலோத்தமா கூறியதுதான்.

பத்திரிகையில் தன்னைப் பற்றி அப்படி என்ன எழுதுகிறார்கள் என்று தானே படித்தறிய முடியவில்லையே என்கிற வருத்தம் அவனைக் குடைந்து கொண்டிருந்தது.

தனக்கு முற்றிலும் தகுதியில்லாத ஒரு காரியத்தில், தான் இறங்கி இருப்பதாக அவன் உள்மனம் உறுத்திய போது அவன் வேதனைப்பட்டான்.

—தொடரும்—

# பூவும்-மணமும்

சிறு. மேக-கதிரவன்.

கையொலி வானைப் பிளந்தது. களிப்புக்குரல் அந்தக் கட்டிடத்தையே அதிர வைத்தது, முகமெலாம் மகிழ்வின் ரேகைகள் இழையோடின. மந்தகாசச் சிரிப்பு தவழ்ந்தது- இவை அத்தனையும் கண்டவனின் உள்ளத்தில் வெறுப்புதான் அதிகரித்தது.

அமைதியின் நிலைக்களனாக இருந்த அவன் உள்ளம் கொல்லன் பட்டறையாகியது. அலை பாயும் கடலாகியது. எலும்பின் வரிசைபோல் அவன் உள்ளத்தில் எண்ணத்தின் எழிலுருவங்கள் பலவும் வளர்ந்து சென்றன.

வானம்பாடியை வளைக்க வரும் வல்லூறு போல், அவன் அமைதியைக் குலைக்க வந்தது அந்த நிகழ்ச்சி.

எண்ணத்தில் எழும் நிகழ்ச்சிக்கு பொறுமையெனும் பொக்கிஷத்தை அள்ளித் தந்து, சிறிது நேரம் நிறுத்தி வைத்தான்.

தொடர்ந்தான், விட்டதிலிருந்து தொடர்ந்தான், தொடர்ந்த ஒன்றினை முடிக்கத் தொடங்கிய அவன் மேலும் முடிக்காது தொடர்ந்தான். முடித்தோம் என்ற நிலை விடுத்து தொடர்ந்தான்.

"நண்பர்களே! அமைதியாயிருங்கள். ஏன் இந்தக் கையொலி? நான் என்னதான் சொல்லி விட்டேன்? எதற்காக வானமே இடிந்து விழுவதைப் போன்ற பேரிரைச்சல்? நான் என்ன சொன்னேன்? சொல்லாததை சொல்லி விட்டேனா? யாருக்கும் தெரியாத ஒன்றினை தான் சொல்லி விட்டேனா? இல்லையே? பிறகு ஏன் இந்தக் கையொலி?

"நண்பர்களே! சற்றே சிந்தித்துப் பாருங்கள். நாம் செம்மறி ஆட்டுக் கூட்டமாக மாறக் கூடாது. நாம், நம் சிந்தனையை இழந்தவராகத் திரியக் கூடாது. நாம் செயலையும்-அறிவையும் மற்றவருக்கு அடகு வைக்கக்கூடாது. நானும் உங்களைப் போன்ற மனிதன். உங்களுக்குள்ளதைப் போன்றே தான் எனக்கும் எல்லாமும்...அப்படியிருக்க ...நான் ஏதோ சொன்னேன், அதற்கு இத்தனை கையொலியா?

"நண்பர்களே! மெத்த வருந்துகிறேன். உங்கள் நிலைக்காக, நான் ஒருவரைப் பழிக்கிறேன். அதற்காக, இத்தனை கையொலியா? கையொலி... இன்று பிறந்தவர் முதல், நாளை இறக்க போகும் மனிதர் வரை எல்லோருக்கும் சொந்தம், சிந்தனை - அதனை ஏற்றுக் கொள்ள மறுக்கிறார்கள் பலர். அதனை தங்கள் வாரிசாக்கிக் கொள்ள விரும்புகிறவர்கள் ஒருசிலர். அந்த ஒரு சிலரிலும், ஒன்றிரண்டு மனிதர்கள்தாம் தம் ஆயுள் சொத்தாக்கிக் கொள்கிறார்கள். அந்த ஒன்றிரண்டு மனிதர்களில் நாம் ஏன் ஒருவராகக் கூடாது என்ற எண்ணம் எழவேண்டும். அப்போது தான் நம் நிலை உயரும். வாழ்வு மலரும். வளமான வாழ்வு நடத்த முடியும்.

'நான் சொன்னாலும், மற்றவர்கள் சொன்னாலும் சரியா என்று பாருங்கள். அதை விடுத்து, அவன் சொன்னான்; இவன் சொன்னான் என்பதற்காகவும் புகழின் உச்சியிலே உலா வருபவன், நாவன்மையுடன் செயல் வன்மையும் கொண்டவன் அவன் என்பதால் நான் அவனை ஆதரிக்கிறேன். அவனது கொள்கையினை போற்றுகிறேன். பாராட்டுகிறேன். இவன் அந்தஸ்திலே பெரியவன் அதனால்தான் தொழுகிறேன் என்பது மடமை!

"நண்பர்களே! அதனால் தான் சொல்கிறேன். ஆகவேதான் இதனை வற்புறுத்துகிறேன். எதையும் சிந்தித்து செயலாற்ற முற்படுங்கள்- கைதட்டல் பெரிதல்ல, ஆரவாரம் அவசியமற்றது. அந்தஸ்து இன்றிருக்கும், நாளை போகும். ஆனால் சிந்தித்து செயலாற்றியதில் உள்ள திறன் என்றும் மங்காது - மறையாது.'

முடித்து விட்டான். கூட்டத்திலே சலசலப்பு. கூட்டம் கலையுமுன் கூட்டத்தை விட்டு வெளியேறினான். வீடு நோக்கி நடந்தான். உடல் தான் வீடு நோக்கிக் கொண்டிருந்ததே தவிர, உள்ளம் உள்ளத்தில் எழும் உணர்ச்சி அது அத்தனையும் தன் பாதையில் சென்று கொண்டிருந்தது.

ஒரு காலத்தில் வெறும் புகழுக்கும், பாராட்டுக்கும் அடிமைப்பட்டிருந்த அவன் இன்று, அதனை வெறுக்கிறான். வேண்டாம் என ஒதுக்குகிறான்.

பாராட்டி பாமாலை வாசிக்கமாட்டார்களா? தனக்கென ஓர் விழா எடுக்கமாட்டார்களா? தன் பெயரால் ஏதாவது நினைவுச் சின்னம்...? பேசினால் கை தட்டல் கேட்காதா? ஆரவாரம் எழாதா? மக்கள் உள்ளத்தில் உணர்ச்சிப் பெருக்கெடுத்தோடாதா? என்றெல்லாம் இரவு பகலெனப் பாராது' எண்ணியெண்ணி உருகி, அதற்கான முயற்சியில் ஈடுபட்டு ஏங்கிக் கிடந்த அவன் இன்று அத்தனையும் வேண்டாம் என்கிறான். வெறுக்கிறான். அவையெல்லாம் வேண்டாதன என்கிறான், கூடாத ஒன்று என்றுரைக்கிறான்.

இது, அவனைத் தெரிந்தவர்கட்கு ஆச்சரியமாயிருந்தது. ஆனால், அவனை அறிந்தவர்கட்கு அது ஒன்றும் அதிசயமாகப் படவில்லை, என்றாவது ஓர்நாள் நடக்க வேண்டும். நடக்கும் என்று எதிர்பார்த்து நின்றனர். அது இன்று நடந்தது. நடக்க வேண்டியது நடந்து விட்டது. இனியும் என்ன அதற்கு என்ற நிலையிலிருந்தனர்.

அவனாகவே எண்ணியதுண்டு பல முறை, என்ன செய்தோம்? ஏன் மக்கள் நம்மை வானளாவப் புகழ்கிறார்கள்? நம் பேச்சில் என்னதான் இருக்கிறது. என் பார்வையிலே என்ன வசீகரம் எனக்கே தெரியவில்லை? ஏன்...? என்னைக் கைப்பிடித்தவளே என்னை வெறுக்கிறாள். ஆனால், என்னைச் சூழ்ந்துள்ள மனிதர்கள் எல்லாம் என்னைப் போற்றுகிறார்கள். பாராட்டுகிறார்கள்.

சிந்தித்தான் பலமுறை, பலநாட்கள். விடை தெரியவில்லை. அதற்காக தன் எண்ணத்தை விட்டொழிக்கவில்லை. தன் செயலை தொடர்ந்து செய்தான், செய்து கொண்டேயிருந்தான், முதலிலிருந்த இன்பம், ஊக்கம் இப்போது இல்லை.

எந்த ஒரு ஆடம்பரத்திற்காக; எந்த ஒரு பாமாலைக்காக; எந்த ஒரு இன்பத்திற்காக; எந்த ஒரு அந்தஸ்திற்காக அவன் காத்திருந்தானோ அது இப்போது கிட்டியது.

ஆனால் அதனை வெறுத்தான். வேண்டாம் என ஒதுக்கினான்.

புகழுக்காக ஏங்கித் தவித்த உள்ளம், இன்று அமைதிக்காக தவித்தது. அமைதியை நாடிச் சென்றது உள்ளம். எந்தச் செயல் புனிதமான செயல் என முதலில் எண்ணினானோ அதனை இன்று புனிதமற்றது என்றுரைத்தான்.

அவன் அன்று வேண்டிய எல்லாம் நடந்தது? அவன் எண்ணங்கள் எல்லாம் ஈடேறிற்று. இன்று, பார்புகழும் பேச்சாளன்; மக்கள் தலைவன். அவன் சுட்டு விரலசைத்தால் அடிபணியும் மனிதர் கூட்டம், இத்தனையும் உண்டு.

அவன், அன்றொருநாள் எதிர்பார்த்த ஒன்றினைவிட இன்று மேலாக இருக்கிறான், அன்று ஏங்கித் தவித்தவன், இன்று இறுமாந்திருக்கிறான். அந்த ஏக்கம் இன்று இறுமாப்பாயிற்று இறுமாப்பு அதிகாரம் செய்தது. அதிகாரம் சர்வாதிகாரம் நடத்தியது. சர்வாதிகாரம் யதேச்சாதிகாரத்திற்கு இழுத்து வந்தது. யதேச்சாதிகார நிலையிலிருந்த அவன் மீண்டும் ஏக்கம் கொண்டான். முன்பிருந்த ஏக்கமல்ல அது. முன்பு உண்டான உயர் ஏக்கமல்ல. முன்பிருந்த நிலைக்குச் செல்லத் தான் அந்த ஏக்கம்.

அந்த ஏக்கம் என்று உருப்பெறும் என்று எண்ணினான். அதற்காக ஏங்கினான். இன்று மக்களைப் புரிந்துக் கொண்டான். மக்களைப் புரியாத நிலையிலே இருந்தபோது இருந்த எண்ணம் இப்போது இல்லை. மக்களைப் புரிந்து கொண்டபின் இல்லாத எண்ணம் ஒன்று வந்தது.

மற்றவர்களை வீழ்த்தி தான் இந்நிலைக்கு வந்தான். மற்றவர்களை ஏணியாக்கிக் கொண்டுதான் இன்று உயர்ந்த நிலையிலிருக்கிறான்.

எண்ணிப் பார்த்தான். நமக்கு இந்நிலை? எப்படி நமக்கு இந்நிலை? விடை கிடைத்தது!

மற்றவர்களின் உடல்மீது நடந்து தான் இந்நிலை எய்தினான். மற்றவரது உழைப்புத் துணை கொண்டுதான் இந்நிலை அடைந்தான் அப்பாவி மனிதர்களின் ஆதரவால் தான் இந்தப்பதவி எய்தினான்,

எண்ணினான். நாம் என்ன செய்தோம்? விடை தெரியவில்லை. நம்மை இந்நிலைக்கு உயர்த்தியவர்களுக்குஎன்ன செய்தோம்? நம்மை உயர்த்தியவர்களுக்கு நன்றியாவது செலுத்தினோமா? விடை தெரியவில்லை. நம்மைச் சார்ந்தோருக்கு என்ன செய்தோம்? விடை தெரியவில்லை.

எண்ணங்கள் எழிலாடின, பல வண்ணங்கள் காட்டி மறைந்தன,

உலகின் உச்சாணிக் கொப்புக்கு வந்திடத் துடித்தான். அமைதியின் இருப்பிடமாயிருந்த அவன் பேரிரைச்சலுக்கு நடுவில் வாழ நினைத்தான், பதுங்கி வாழும் புலியாக இருந்த அவன்; பலர் பார்வையில் வரும் பறவையாக நினைத்தான்.

படிக்கும் போது இருந்த எண்ணம், படித்துவிட்ட பிறகு இல்லை. பால் பருகும்போது உள்ள சுவை குடித்து கிண்ணத்தை கீழே வீசிய பிறகு எழவில்லை.

படிக்கும் போது எழும் செழுமையான எண்ணங்கள் பலப்பல. அதனை செயல்படுத்த துடித்தான் அன்று. ஆனால், இன்று, படித்து முடிந்த அவன், அந்த எண்ணங்களையும் தன் மனதில் முடித்துக்கொண்டான்.

அடங்கிக் கிடந்து இல்லாததையும், தேவையானதையும் அறிந்து உலகுக்கு உழைக்க வேண்டும் என்று எண்ணினான் அன்று. ஆனால் இன்று, அடங்கிக்கிடந்து - மறைந்து செய்யும் நற்காரியத்திற்கு புகழ் கிடைக்காதே என்றெண்ணினான், வெறும் புகழுக்கு அடிமைப்பட்ட அவன் தன்னையே மாற்றிக் கொண்டான். புகழின் உச்சியை அடைய தன்னைச் சார்ந்தோரை தன் பக்கம் திருப்பினான். புகழுக்காக பலர் முன் வந்திட்டான். பார் அறிய பேசி. நின்றான். நாடறிய எழுதினான். மக்களறிய தொண்டுகள் பலவும் செய்தான்.

இன்று அவன் தலைவன். ஊரறியும் அவனை நாடறியும் அவனை. உலகறியும் அவனை. ஆனால். அவன் உள்ளத்தையறிந்தார் யாருமிலர். கள்ளமில்லா உள்ளம். கபடமில்லாப் பார்வை' இதுதான் மற்றவர் கண்டது.

அன்று, அவன் வேண்டிக்கிடந்தது, இன்று, அவன் காலடியில். அவன் வேண்டிக் கிடந்த புகழ் கிடைத்து விட்டது. மக்களின் முன் புகழப்பட்டான். ஆனால்...அவன் மனம் அத்தனையும் விரும்பவில்லை. ஏற்கவில்லை. வேண்டாத ஒன்று கிடைத்ததாக எண்ணினான், அதற்காக வருந்தினான்.

ஒரு காலத்தில் புகழை வரவேற்றவன் இன்று அதனை வெறுத்தான். புகழுக்காக ஏங்கிக் கிடந்தவன் இன்று அதனை வேண்டாம் என்றொதுக்கினான். எந்தவொரு பேரிரைச்சலுக்காக அன்று அமைதியை விடுத்து வந்தானோ, அந்த அமைதிக்காக இன்று காத்திருந்தான்,

ஓயாத பேரிரைச்சலுக்கு நடுவில், 'புகழ்' மாலை சூட்டிக் கொண்ட அவன் இன்று, கலையாத - அழியாத அமைதிக்காக அந்த மாலையை தூக்கி எறிந்துவிட்டு தன் சிறு குடில் நோக்கி நடந்தான்.

அதனை இத்துணைக் காலமும் புடை சூழ்ந்திருந்தவர்கள் எல்லாம் ரோசா மலரிலிருந்து உதிரும் இதழ்கள் போல் ஒவ்வொருவராகப் பிரிந்து சென்றனர். இப்போது அவன் வெறும் நார் தான். ரோசாமலரிழந்த - மணமிழந்த நார்.


## ஏஜெண்டுகள் தேவை

**கீழ்க்கண்ட இடங்களுக்கு தென்றல் விற்பனையாளர் தேவை!**

| | |
|---|---|
| வாணியம்பாடி | போடிநாயக்கனூர் |
| ராணிப்பேட் | ஸ்ரீ பெரும்புதூர் |
| புதுக்கோட்டை | பெருந்துறை |
| கும்பகோணம் | பேரையூர் |
| பொன்மலை | பிலாய் |
| கீரனூர் | குளித்தலை |
| பண்ணுருட்டி | வெள்ளக்கோயில் |
| திருக்கழுக்குன்றம் | கடையநல்லூர் |
| அவிநாசி | தாராபுரம் |
| அகமதாபாத் | திருமயம் |
| மீஞ்சூர் | வனவாசி |
| கல்லிடைக்குறிச்சி | நாமகிரிப்பேட்டை |
| ஒட்டன்சத்திரம் | பாபநாசம் |
| ஜெயங்கொண்டம் | சாத்தூர் |
| பரவை | தென்காசி |

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

அமைச்சர் : அரசே ! எண்ணித் துணிக கருமம் :

நெடுஞ் : கோக்கோதையாரே ! நீர் என்ன சொல்கிறீர் ?

அமைச்சர் : அரசே ! தன் வலியும் மாற்றான் வலியும் துணைவலியும் தூக்கிச் செயல்பட வேண்டாமா ?

நெடுஞ் : உண்மைதான் அமைச்சரே ! ஆனால், இந்த உபதேசம் யாருக்கு என்பதை உணர்ந்தீரா ? "மாற்றானை வென்றுதான் ஆகவேண்டும்" என்று போர் வெறிகொண்டவர்களுக்குச் சொல்லும் போதனை அமைச்சரே இது !

நாம் போர் வெறியால் புறப்படவில்லை அமைச்சரே ! மான உணர்ச்சியால் தூண்டப்பட்டுப் போகிறோம். நமக்கு வெற்றி வந்தாலும் சரி: வீரமரணம் வந்தாலும் சரி; போர் போர்தான்!

(கீழ்வரும் பாடலை நெடுஞ்செழியன் பாடுகிறான்)

**நகுதக் கனரே நாடு மீக்கூறுநர்**
**இளையன் இவனென உளையக் கூறிப்**
**படுமணி இரட்டும் பாவடிப் பணைத்தாள்**
**நெடுநல் யானையும் தேரும் மாவும்**
**படையமை மறவரும் உடையம் யாமென்று**
**உறுதுப்பு அஞ்சாது உடல்சினம் செருக்கிச்**
**சிறுசொற் சொல்லிய சினங்கெழு வேந்தரை**
**அருஞ்சமம் சிதையத் தாக்கி முரசமொடு**
**ஒருங்கு அகப்படேஎன் ஆயின் பொருந்திய**
**என்நிழல் வாழ்நர் செல்நிழல் காணாது**
**கொடியன்எம் இறையெனக் கண்ணீர் பரப்பிக்**
**குடிபழி தூற்றும் கோலேன் ஆகுக !**
**ஓங்கிய சிறப்பின் உயர்ந்த கேள்வி**
**மாங்குடி மருதன் தலைவன் ஆக**
**உலகமொடு நிலைஇய பலர்புகழ் சிறப்பிற்**
**புலவர் பாடாது வரைகஎன் நிலவரை !**
**புறப்போர் புன்கண் கூர**
**இரப்போர்க்கு ஈயா இன்மை யான்உறவே !**

(புறம் 72)

[அரசன் இப்பாடலைப் பாடியதும் மாங்குடி மருதனார் முதலிய புலவர்கள் கைதட்டி ஆரவாரம் செய் செய்கின்றனர். அமைச்சர் கோக்கோதையார் பாடலின் கருத்துக்களை சரியாகப் புரியாமல் மாங்குடி மருதனை நோக்கி]

அமைச்சர் : புலவர் பெருமானே ! அரசர் கூறிய பாடலின் உட்பொருளை விளக்கமாட்டீர்களா ?

மாங்குடியார் : ஆகா. விளக்குகிறேன்:

"மணியோசை ஒலிக்கவரும் பரவிய திரண்ட கால்களையுடைய நெடிய பெரிய யானையும், தேரும், குதிரைகளும், படையில் அமைந்த வீரர்களும், நாம் பெற்றிருக்கிறோம் என்கிற எண்ணத்தால், உடம்பில் சினமும் செருக்கும் கொண்டவராகி, எதிர்ப்பின் வலிமையை உணராமல், பாண்டி வளநாட்டைச் சிறப்பித்துக் கூறுவோர் சிரிக்கத்தக்கவரென்றும், அதன்,அரசன் சிறுவன் என்றும், மனம் புண்படும்படி, சிறு சொற்கூறிய சினம்மிக்க வேந்தர்களை, பொருதுவதற்கு அரிய போர்க்களத்திலே தவிடு பொடியாக்கி, அவர்களுடைய வீரமுரசத்துடன் அவர்களையும் சேர்த்துக் கட்டி இழுத்துக்கொண்டு வராமல் இருந்தேனாயின், எனது குடைநிழலில் வாழ்கின்ற குடிகள் அனைவரும் புகலிடம் இன்றி "எமது அரசன் கொடுங்கோலன்" என்று, கண்ணீர் வடித்துப் பழிதூற்றும் கொடுங்கோலன் ஆவேனாக. உயர்ந்த சிறப்பு வாய்ந்த மேம்பட்ட கல்வி கேள்விகளால் மாங்குடி மருதன் முதல்வனாக, உலகத்தோடு நிலைபெற்ற, பலர் புகழ் சிறப்புவாய்ந்த புலவர் பெருமக்கள், எனது பாண்டி வளநாட்டைப் பாடாது ஒழிவாராக. என்னால் பாதுகாக்கப்படும் சுற்றத்தார் துயரத்துடன் இருக்க, இரக்கின்றவர்க்கு ஈய முடியாத வறுமையை நான் அடைவேனாக. என்று, அரசர் கொடுஞ்சூள் உரைக்கிறார் அமைச்சரே !

அமைச்சர் : (கண்களில் நீர் தத்தளிக்க நாத்தழுதழுக்க) அரசனைப் பார்த்து, அரசே! பொறுத்தருள்க. பாண்டி வளநாட்டு ஆண்டகையோர்க்குச் சாவும் வாழ்வும் ஒன்றுதான் ! ஆனால், நான் கூற வந்தது வேறு. அவசரப்பட்டுக் கொடுஞ்சூள் உரைத்துவிட்டீர்கள்.

நெடுஞ் : அமைச்சர் பிரானே ! நீர் கூறவந்தது யாது ? அதனைக் கூறுக !

அமைச்சர் : அரசே ! நாம் படைகொண்டு செல்லுமுன்னால், ஒற்றர்களை அனுப்பி தலையாலங்கானத்து நிலைமைகளை அறிந்துவரச் செய்தல் சாலச்சிறந்ததென்று கருதினேன்.

நெடுஞ் : அமைச்சர் பெருமானே ! இதற்கெல்லாம் நான் அனுமதி கொடுத்தால்தானா ? நீரே ஒற்றர்களை அனுப்பலாமே ! இப்போதே அனுப்புங்கள் !

(அவை கலைகிறது)

## காட்சி 2.

காலம் : மறுநாள் விடிந்து ஐந்து நாளிகை.

களம் : மதுரை வடபால் பெருந்திடல்.

இருப்போர் : படைத்தலைவர் உக்கிரவீரபாண்டியர், புலவர்கள், அமைச்சர்கள், தேர், யானை, குதிரை காலாள் ஆகிய நால் வகைப் படைவீரர்கள்.

படைத்தலைவர் : பாண்டி வளநாட்டு வீரப்பெருமக்காள் ! தினவெடுத்த திண்டோள் மறவர்காள் ! உறையிலிட்ட வாளுக்கும், சிறையிலிட்ட வேலுக்கும் வேலை வந்துவிட்டது ! தலையாலங்கானம் நம்மை அழைக்கிறது. சேரநாட்டுத் தீரர்களும், சோழநாட்டுச் சூரர்களும் மண்ணுலகை வாழ்வை வெறுத்து விண்ணுலகம் சேர விரும்பி, நமது உதவிக்காகத் தலையாலங்கானத்தில் காத்திருக்கின்றனர். நமது வேந்தர் பெருமான் நெடுஞ்செழியன், இந்தப் போரில் வென்று வாகைசூடவில்லையானால் துறவு கொள்ளப்போவதாகக் கொடுஞ்சூள் உரைத்திருக்கிறார். அந்தச் சூளுரையை நிறைவேற்ற வேண்டிய மாபெரும் பொறுப்பு, நமது தலைமேல் இருக்கின்றது. அரசர் அத்தகைய கொடுஞ்சூள் உரைத்த காரணம் இதுதான் :

நமது அரசரையும் அணிமாடம் சூழ்ந்த பாண்டி வளநாட்டையும் அந்தப் புல்லர்கள் எள்ளி நகையாடி இருக்கின்றனர். அவற்றை விவரித்து புலவர்பெருமான் மாங்குடி மருதனார் உங்களுக்கு எடுத்துரைப்பார்.

[தலையாலங்கானத்தை தலையாடும் கானமாக்குவோம் ! பாண்டியநாட்டு வீரத்தைப் பாருலகில் நிலைநாட்டுவோம் ! என்று படைவீரர்கள் ஆரவாரம் செய்தனர்]

மாங்குடியார் : பாண்டிவளநாட்டு ஆண்டகையீர் ! அமைதி ! அமைதி !

போருக்கு அஞ்சாப் புலிபோத்து அனையீர் !

பாருக்குத் தமிழ் தந்த பாண்டியர்கள் பரம்பரையில் வந்தவர், நமது அரசர் பெருமான் நெடுஞ்செழியன்.

அவர், ஆண்டுகளால் மிக்க இளைஞர். அறிவாற்றலால் மிக மிக முதியர். உண்மையினாலும், திண்மையினாலும், உலகாளும் பெருமையினாலும், நமது அரசர் எவருக்கும் குறைந்தவரல்லர். வீரத்தாலும், விவேகத்தாலும், வேண்டிய கல்வி கேள்வியாலும், பாண்டிய நாட்டின் மணிவிளக்கு அவர்.

அவர், சொல்லெடுத்து நின்றால், எதிர்சொல்ல ஆளில்லை !

அவர், வில்லெடுத்து நின்றால், எதிர் நிற்க வீரர் இல்லை !

அவர் வாளெடுத்து நின்றால், வையகம் காலடியில் !

அத்தகைய நாவலனைக் கோமகனை நாட்டின் தலைமகனை, அந்த நச்சுவாய்ச் சோழர்களும் சேரர்களும் சிறு பையன்-செங்கோலேந்தும் திறமற்றவன்-என்று, திருமுகம் தீட்டியுள்ளனர்.

நமது விறலார் திருநாட்டு வேந்தன், அந்த வீணர்களின் காலடியில் நின்று, கப்பம் கட்டி வாழவேண்டுமாம் !

அந்தத் திருமுகத்தைக் கண்டபிறகு தான், நமது வேந்தர்பிரான் சிந்தை நொந்து வெஞ்சூள் உரைத்தார்.

மானமறவர்களே ! மாற்றாரைப் புறங்காணும் மாவீரர்களே ! நமது மாமன்னர் மண்டியிட்டு வாழ்வதைக் கண்டு களிப்பீர்களா ?

('மாட்டோம் ! மண்டியிட விடமாட்டோம் ! என்று வீரர்கள் ஒரே குரலில் முழக்குகின்றனர்")

வீரர் குடிப்பிறந்த வெம்போர் மறவர்காள் !

பகைவர்கள், மண்வெறியால் போராட வந்துள்ளனர் ! நாம், மான வெறியால் போராடப் போகின்றோம் ! அவர்கள் பெருந்தொகையினர் ! நாமோ நனிமிகச் சிறிய தொகையினர் ! படுகளத்தில் பாண்டிவளநாடு தோற்றால், நமதுஅரசர் தலையாலங்கானத்திலிருந்தே, தண்டும் கமண்டலமும் ஏந்திச் சென்றுவிடுவார். நாமெல்லாம் நாட்டுமக்களுடன் மாற்றார் கைப்பட்ட மாட்டு மந்தையாய்ச் சீரழிய வேண்டிவரும் மறந்து விடாதீர் !

(மறக்கமாட்டோம் ! கடைசித்துளி இரத்தம் உடலில் ஓடும்வரை வெளியிலெடுத்த வடிவாளை உறையிலிடோம் ! வந்தால் வாகைசூடி வருவோம் ! நின்றால் நடுகல்லில் நிற்போம் ! இது ஈன்றெடுத்த தாய்மேல் ஆணை ! இன்பத் தமிழ்மேல் ஆணை ! தலையாலங்கானத்தை பிணமாடும் கானம் ஆக்குவோம் ! என்று வீரர்கள் சூள் உரைத்தனர்.)

(தொடரும்)

(5-ம் பக்கத் தொடர்ச்சி)

ஆட்சியாளரிடம் பல தூதுக்குழுக்களின் மூலம் நேரடியாகச் சென்று கிக்குயூ மக்களுக்கு நிலங்களை மீண்டும் அளிப்பது சம்பந்தமாக வாதாடும் வாய்ப்பினை ஏற்படுத்தச் செய்தது.

கென்யாட்டா தொடர்ந்து ஐரோப்பாவில் சுற்றுப்பயணம்மேற்கொண்டான். அப்பொழுது இரண்டாண்டு காலம் மாஸ்கோ பல்கலைக் கழகத்தில் மாணவவிருந்தினனுகத்தங்கிப் பயிலும் வாய்ப்பினைப் பெற்றான். அதோடு இலண்டன் பொருள், அரசியல் அறிவியல் பள்ளியில், பேராசிரியர் **பிராஸ்னிலா மாலினுவ்ஸ்கியிடம்** கல்வி கற்றான. இங்ஙனம் பல்துறையிலும் அறிவு பெற்றதன் விளைவாக **கென்யா சிகரத்தை நோக்கி'** Facing mount kenya) எனும் நூலினை எழுதினான். இந்நூல் அவனது இனமக்களைப் பற்றிய முன்னோட்டமாக அமைந்தது.

ஜோமா இங்கிலாந்தில் பதினேழு ஆண்டுகளைக் கழித்தான். அங்கே அவன் **'மனித இயலில்'** (Anthro pology) பெருந்திறமையாளனுனன் தான் பெற்ற நல்லறிவு ஆய்வுத் திறனுல் கிக்குயு மக்களின் பழக்க வழக்கங்களைப் பற்றிச் சிறந்த நூலொன்றினை வெளியிட்டான்.

**1939ல்** இரண்டாம் உலகப் பெரும்போர் தொடங்கிய பொழுது ஆப்பிரிக்காவிலிருந்த மற்ற தேசிய இயக்கங்கள் தடை செய்யப்பட்டது போலவே கிக்குயு தலைமைச் சங்கமும் தடை செய்யப்பட்டது. ஆனால் **சுதந்திரப் பள்ளிகள் சங்கம்** மட்டும் இயங்கிவர அனுமதிக்கப் பட்டிருந்தது. போர்க்காலத்தில் ஜாமோ பெரும்பாலும் எதுவுமே செய்யாதவாளாவிருந்தான்.

**1946ல்** கென்யாட்டா, தனது சங்கத்தால் நடத்தப் பெற்று வந்த **கிதுங்கரி** (Githunguri) **கல்லூரி** எனும் ஆசிரியர் பயிற்சிக் கல்லூரியின் தலைவராகப் பணியாற்றினான். அப்போது இளம் ஆசிரியர்களின் உள்ளங்களில் தேசீய இன உணர்வுக் கொள்கைகளை வளரச் செய்தான்

**1947ல்** கென்யா ஆப்பிரிக்கர் சங்கம் ஜோமோ கென்யாட்டாவின் தலைமையில் (Kenya African union) உருவானது. நீக்ரோ மக்களின் முன்னேற்றத்திற்கு உழைப்பதே அதன் நோக்கமாகும். அதே ஆண்டில், எதிர்பாராத வகையில் ஓர் திடுக்கிடும் செய்தியை ஆட்சியாளர் வெளியிட்டனர். கென்யா ஆப்பிரிக்கர் சங்கம் மறைமுகமாக 'மாவ்-மாவ்' எனும் பயங்கரப் புரட்சி இயக்கத்தைத் துவங்கி வருவது பற்றியும் அதைத் தடுக்க வேண்டுமென்றும் ஜோமோவைக் கேட்டனர்.

ஜோமோ கென்யாட்டா அவன் இனமக்களின் பொதுக்கூட்டததில் பேசச் சென்றிருந்த பொழுது 20000க்கு மேற்பட்ட பெருந்திரளான மக்கள் வெள்ளம் அமைதியாகக் கூடியிருந்து அவன் பேச்சைக் கேட்டனர். அம்மாபெரும் கடலென்னக் குழுமியிருந்த மக்களிடம் 'தங்களது தாயகத்தை அமைதியான முறையில் அறவழியில் போரிட்டு மீட்கவேண்டிய இன்றியமையாமை குறித்து விளக்கினான். கென்யாட்டா தனது சொற்பொழிவில், உருவாகும் 'மாவ் மாவ்' இயகக்த்தைப் பற்றிக்கண்டிக்காததால் அவ்வியக்கம் கென்யாட்டாவின் முழுச் சம்மதத்தோடு புரட்சியில் ஈடுபட இருக்கிறது எனக் குற்றம் சாட்ட முயன்றனர். இதனையே காரணமாக வைத்து ஜோமோவையும் அவனது துணைவர்கள் ஐவரையும் கைது செய்தனர். அவன் சிறைப்பட்ட தன் விளைவு 'மாவ்-மாவ்' இயக்கம் தீவிரப் புரட்சியில் இறங்கியது.

புரட்சியால் பயங்கர விளைகள் நேர்ந்தாலும், எண்ணிலடங்காப் புரட்சி வீரர்கள் பலியானுலும்கூட அரசாங்கத்தை உலுக்கியது. வெறிபிடித்த 'ஆதிக்கத் தர்பார்' செய்து கென்யா மக்களைப் புன்மைத் தேரையெனக் கருதிமிதித்தகொடுங் கோன்மைக்கு ஒரு முடிவு கட்டியது. கருப்பு மக்களின் ஒப்பற்ற வழிகாட்டி இன்றும் பாதுகாப்பிலேயே வைக்கப்பட்டுள்ளான்.

# காட்டுமிராண்டித்தனம் கட்டவிழ்த்து விடப்பட்டிருக்கிறது!

இலங்கைத் தமிழரின் அறப்போர் நேர்மையான வழியில் தீர்க்கப்பட்டு நல்லுறவு தழைக்கும் என்று நம்பி இருந்தவர்கள் ஏமாற்றம் அடையத்தக்கசெய்திகள் வருகின்றன.

இங்கிலாந்திலிருந்து திருமதி பண்டார நாயகா இலங்கை திரும்பியவுடன் பேசிய வானொலிப் பேச்சுக்கள் சிறிதும் பொறுப்பு வாய்ந்ததாக இல்லை.

''மரியாதையாக அறப்போரைக் கைவிட்டு சரணடையாத வரை, சிங்களவர்கள் உங்களுக்குச் சரியான பாடம் புகட்டுவார்கள்'' என்பதுபோல் இருந்தது அவரது பேச்சு.

உண்மையாகவே ஜனநாயக உணர்வுடன் பேசுகிற ஒரு முதன் மந்திரியின் பேச்சாக இல்லை அது.

தமிழர்கள் தனியொரு இனம் என்பதையும், இலங்கை மக்கள் தொகையில் தமிழர்கள் மேஜர் மைனுரிட்டி என்பதையும், தமிழர்களின் இனத்தினர் அண்டையில், 10 கல் தூரத்தில் பெருந்திரளாக இருக்கின்றனர் என்பதையும், திருமதி பண்டார நாயகா உணர்ந்து 'பேசுவதாக இல்லை;

மேலும், இலங்கையின் பாதுகாப்பும், பொருளாதாரமும் அண்டையிலுள்ள திராவிடத்துடன் பெருந்தொடர்பு கொண்டது என்பதையும், என்றைக்கிருந்தாலும் திராவிடம்—தமிழகம் தன்னுட்சி பெற்று சுதந்திர நாடாக இலங்க இருக்கிறது என்பதையும், பண்டார நாயகா சிந்தித்ததாகத் தோன்றவில்லை.

இலங்கைச் சிங்களவரில் சில பொறுப்பற்ற வெறியர்களின் கருத்துக்கும் போக்குக்கும் ஆதரவளிக்கும் தன்மையிலேயே பண்டாரநாயாகாவின்சொல்லும் செயலும் இருப்பதாகக் கருத வேண்டி இருக்கிறது.

இது, சிங்களவரின் வருங்கால நலத்திற்குச் சிறிதும் உகந்ததல்ல. உலக முழுதும் பரவி இருக்கும் 12 கோடி திராவிட மக்களின் வெறுப்பையும், பகையையும், சிங்களவரின் சொத்தாக்கி வைப்பதற்கே பண்டார நாயகாவின் பேச்சும் செய்கையும் பயன்படும் என்று எதிர்பார்க்கலாம்.

யாழ்ப்பாணத்தில் அரசாங்க அலுவலக முன்னுல் அறப்போர் புரிந்த தமிழர்கள்மீது வெடி குண்டுகள் வீசப்பட்டனவாம். கற்கள் சரமாரியாகவீசப்பட்டனவாம்.

திருமதி பண்டார நாயகாவின் பொறுப்பற்ற பேச்சு இப்போதே பலனளிக்க ஆரம்பித்திருக்கிறதென்று கருதவேண்டி இருக்கிறது.

இன்னும் என்னென்ன தீய நடவடிக்கைகள் வளரும்என்பது தெளிவாகத் தெரியாவிடினும், அவைகள் இழிவான - காட்டுத்தனமான செயலாகவே இருக்க முடியும் என்று திடமாக நம்பலாம்.

ஏனெனில், நாட்டின் முதன் மந்திரியே காலித்தனத்திற்கு ஆதரவு காட்டும்போது, காலித்தனம் தானே கோலோச்சி வரும்!

இலங்கை அரசாங்கத்தில் ஜனநாயக ஆட்சித் தத்துவங்களின் நுட்பங்களை உணர்ந்த நல்லவர்களும் இல்லாமல்இல்லை. ஆனுல்; அவர்களின் சொல், செல்லாக்காசாக மதிக்கப்படும் அளவுக்கு காலிகளின் அட்டகாசம் ஆட்சிபீடத்தைச் சுற்றி இருப்பதுபோல் தோன்றுகிறது.

ஆகவே, அவர்களுடைய குரல் ஓங்கி நிற்கவில்லை. இது, இலங்கையின் விநாசகாலத் தொடக்கத்தின் அறிகுறியென்றே சொல்லவேண்டும்.

எந்த நாட்டில் நீதிவான்கள் புறக்கணிக்கப்பட்டு அநியாயக்காரர்களின் கை ஓங்கி நின்றதோ, அந்த நாடு அழிந்து-ஆட்சி மண்ணேடு மண்ணுகிப் போனதை வரலாறு சொல்லிக் கொண்டிருக்கிறது.

ஆனுல், அநியாயக்காரர்களுக்கு உயிர் போகும்வரை நீதியின் வலிமை புலப்படுவதே இல்லை. இதற்கு சிங்களர்மட்டும் விதிவிலக்காக இருக்கமுடியுமா?

இது ஒருபுறம் இருக்க இங்கே லுமம்பாவுக்குச் சொந்தக்காரர்கள் இருக்கிருர்கள். அல்ஜீரியாவின் பேரன்மார் இருக்கிருர்கள். ஆனுல்,அண்டையிலுள்ள இலங்கைச் சொந்தக்காரர்கள் இல்லை.

ஆகவே, லுமம்பா கோஷ்டியைப் பாதுகாக்க 3000 துருப்புகள் போகின்றன. அல்ஜீரியாவுக்கு அனுதாபம் பறக்கிறது. இலங்கை பற்றி வாய் திறப்பாரில்லை.

காரணம் இதுதான்; இலங்கைத் தமிழர்களின் மேல் சிங்களர் எத்தகைய மொழியாதிக்கம் செய்யத் துணிகிருர்களோ அதே மொழியாதிக்க வெறி இங்குள்ள வடவரின் மூளையில் தோன்றிப் பரவி, இலங்கையில் குடியேறியதுதான்.

இங்குள்ளவர்களில் வடவர்களின் கையாட்களே பெரும்பாலும் இருப்பதால், இலங்கைத் தமிழர்களை ஆதரிக்க மறுக்கிருர்கள் அல்லது மௌனம் சாதிக்கிருர்கள்.

அதே நேரத்தில்; மானவெட்கமின்றி காங்கோ அல்ஜீரியா கென்யா முதலிய அயல்நாடுகளின் அரசியல்பறறி தங்களுக்கும் மனிதத்தன்மை இருப்பது போல் நியாயம் பேசுகிருர்கள்.

இலங்கைத் தமிழர்களின் அறப்போர் இங்குள்ள வடவர் கைக்கூலிகளின் மனிதத் தன்மையில் வெடி வைப்பதாக இருக்கிறது.

அந்த அறப்போர் வென்ருல் இங்குள்ள அடியார்களின் ஆணவமிக்க அடிமைப்புத்தியில் விழுந்த அடியாகவே இருக்கும்.

ஆகையால் இலங்கைத்தமிழர்கள் சிங்களவர் கொலைசெய்து மலை மலையாய்க் குவிப்பினும் நிலை கலங்காது அறத்தொடு நின்று வாகைசூட வேண்டும் என்று வாழ்த்துகிருேம்.

அறந்தான் முடிவில் வெல்லும் என்பதில் இலங்கைத்தமிழர்கள் அசையாத நம்பிக்கை கொள்ளவேண்டும்.

—மாசரா.

தலைமுறையின் தனிக்கவிஞர்

**கண்ணதாசன்** வழங்கும்

வண்ணப் பண்ணமுது!

தேன்மணக்கும் தென்றல் நடையில் முல்லைக்
கருத்து மணக்கும் முத்துப்பாக்கள்

முப்பது!

இறைவன் புகழ் பாடிய இரு'பாவை'களுக்குப் பிறகு
இயற்கைக் கன்னியின் எழிலைப்பாடும்




கவிதைத் தேன் கூடு!

உங்கள் நெஞ்சில் நீங்கா இடம் பெறப்போகும்
கொஞ்சு தமிழ்க் காவியம்

முழுமதி 'மே இதழ் முதல் தொடர்கிறது'

முழுமதி :-: சென்னை-29.

1-ம் பக்கத் தொடர்ச்சி

யோரத்தில் கடுமையான கண்காணிப்பு இருந்துவர வேண்டும். எல்லையோரமாய் இருக்கும் நாடுகளில் இந்திய அரசாங்கம் நல்ல தொடர்பு கொண்டு அந்தப் பகுதிகளில் எல்லாம் உள்நாட்டுக் கலவரம் ஏற்படாமல் பார்த்துக்கொள்ளவேண்டும் என்று அறிவுறுத்துகிறார்.

ஆனால் சீன முற்றுகை சம்பந்தமான தளபதி கரியப்பாவின் கருத்தை முன்னாள் இந்தியத் தூதுவர் வரலாற்று நூலாசிரியர் கே. எம். பணிக்கர் மறுப்பதுபோல் ஒரு நூல் வெளியிட்டிருக்கிறார்.

திரு. பணிக்கர் மத்தியகிழக்கு, ஆசியா, ஐரோப்பா, சீனா ஆகிய இடங்களில் நிர்வாகப் பொறுப்பிலிருந்தவர் இந்தியாவின் பிரதிநிதியாகப் பணியாற்றியவர் Problems of Indian defence என்ற அவருடைய நூலில் "சீனப்படைகளின் வருகை ஒரு சல சலப்பே தவிர படையெடுப்பு அல்ல,வெளிப்படையான தாக்குதல் ஏற்படலாம் என்று எண்ணுவது பகற் கனவாகத்தான் இருக்கமுடியும்" என்கிறார்!

மேலும் சொல்கிறார்; கட்டாய ராணுவத் தொண்டு முறை தேவையில்லை யென்றாலும் துணைப்படை முறைகளை வலுப்படுத்த வேண்டும். அவசரகால ஆயுதப்பயிற்சியோடு இருக்கும் குடிமக்களும் நிறைய இருக்க வேண்டும். எண்ணிக்கை அளவில் படைகள் பரவலாக இருப்பதைவிட மிகத் திறமை வாய்ந்தவர்களாக இருக்கும் குறிப்பிட்ட அளவு படை அதிகப் பயன்தரும். அரசியல் நோக்கம் குறுக்கிடாமல் பாதுகாப்பு அலுவல்களைக் கவனித்து வரவேண்டும் என்கிறார் பணிக்கர்.

இவற்றுள் திரு. கரியப்பாவின் கருத்துக்களை இந்தியா ஆழ்ந்து நோக்க வேண்டும். நோயாளியைத் தெரிந்த மருத்துவன் யோசனைபோல் கரியப்பாவின் யோசனைகள் அமைந்துள்ளன.

தளபதி கரியப்பா இத்துடன் நிற்கவில்லை. இந்தியாவுக்கு ஒரு இராணுவ சர்வாதிகார ஆட்சி ஏற்படவேண்டும் என்று வலியுறுத்திக் கூறுகிறார்! அவர் அதற்காக என்ன அவசியம் கூறுகிறார் என்றால், இன்று இந்தியாவில் எல்லைப் பாதுகாப்பிற்கான உத்திரவாதம் குறைந்து விட்டது. உள்நாட்டு நிருவாகம் கட்சிப் பூசலால் உருக்குலைந்து நிற்கிறது. எங்கு நோக்கினாலும் இலஞ்சம் பரவலாயிருக்கிறது. கோடிக் கணக்காய்ப் பணம் செலவிட்டுத் திட்டங்கள் போட்டாலும்பலனில்லை. எனவே, அபிவிருத்தித் திட்டங்கள் அனைத்தும் முடிவடைந்து ஒரு சிறப்பான கட்டத்தை அடையும் வரை இந்தியாவில் ஒரு இராணுவ ஆட்சி ஏற்படுவது மிகவும் நல்லது. அது நாட்டின் முன்னேற்றத்திற்கு அதுவும் இன்றைய நிலையில் நன்கு துணைபுரியும், என்கிறார்.

இத்தகைய எண்ணம் ஜனநாயகத்தில் அவருக்கு ஏற்பட்டுள்ள அவ நம்பிக்கையினால் வந்திருக்கலாம் என்று சொல்வதற்கில்லை. ஜனநாயகமே இங்கு சரிவர அமைந்து இயங்கிவரவில்லை. பெரும்பான்மையை நம்பி அரசாங்கம் நடக்கிறது ஜனநாயகம் என்பதை பெரும்பான்மைஎன்றே பலர் தவறாகக் கருதுகின்றனர் பெரும்பான்மையுள்ளவர்கள் பிற்போக்கு வாதிகளாய் உள்ளனர். ஜனநாயகம் இப்பிற்போக்கையும் நடத்தித்தான் செல்லும். எதுவரை? முற்போக்குள்ள மற்றொரு பெரும்பான்மை ஆட்சிக்கு வரும் வரை இதனால் ஏன் காலம் வீணாக வேண்டும்என்று தளபதி கரியப்பா விரைகிறார் போலும்! கூடிய விரைவில் எந்த ஒரு திட்டத்தையும் நிறைவேற்ற ஒருஇராணுவத்தளபதியால் முடியும்! அதுபோல், ஒரு அமைச்சரவையால் முடியாது என்பது தளபதியின் கருத்து. இது சரியல்ல! ஜனநாயகம் மிகத் தீவிரமான காரியங்களைமின்சார வேகத்தில் செய்யஉதவும். ஆனால் அதைப் பிரயோகிப்பவர்கள் நாணயமானவர்களாயிருக்க வேண்டும். நிருவாகப் பொறுப்பிலிருப்பவர்கள் நேர்மையாகவே விரும்பியும் விரைந்தும் சீர்திருத்தங்களைச் செய்யவேண்டும் என்று நினைத்தால் எளிதாகச் செய்யலாம். அதற்கு மனவளம் வேண்டுமே தவிர இராணுவம் வேண்டியதில்லை. மனமுவந்து மாறுவது தான் மகிழ்ச்சிக்குரியது, அச்சத்தின்கீழ் மாறுவது நிரந்தரமாகாது. பர்மாவில் ஆங்சான் அரசாங்கம் நிலச் சீர்திருத்தத்தை மேற்கொண்டது. இராணுவத்தால் அல்ல — நல்ல உள்ளம் கொண்ட பொதுநலத் தொண்டர்களால்தான்! அபிவிருத்தித் திட்டங்களை நடைமுறைக்குக் கொண்டுவருவதில் இன்னும் அதிகப் பொறுப்பும் கண்டிப்பும் இந்திய அரசாங்கத்திற்கு வேண்டும் என்பதே கரியப்பாவின் உட்கிடக்கை. இன்றைய தினம் பாகிஸ்தான், எகிப்து, ஸ்பெயின், ப்ரான்ஸ், யுகோஸ்லேவியா, ஆகிய இடங்களில் இராணுவத் தளபதிகளின் ஆட்சிதான் நடைபெற்று வருகிறது. அங்கேயெல்லாம் தீவிரமான முறையில் அபிவிருத்தி வேலைகள் நடைபெறுகின்றன. அந்த நாடுகளைப் பற்றி மற்றவர்களும் எளிதாக நினைப்பதற்கில்லை. காரணம் அரசியல் காரணமாகப் பிளவுகள் ஏற்படாமல் கட்டுக்கோப்பாகக் காரியங்கள் நடைபெற முடியும். சட்டத்தை மீறுகிறவர்கள் ஜனநாயக நாடுகளில் கடுமையாய்த் தண்டிக்கப்படுவார்கள்.

ஆனால் இந்தியாவில் பொதுநல விரோதிகளே பெரிய மனிதர்களாக இருக்கிறார்கள்! சட்டத்தைச் சுக்கல் சுக்கலாக உடைக்க முற்படும் தீயவர்கள் தான் அறநெறியும் அரசியல் நெறியும் வகிக்க உட்காருகிறார்கள்! இந்த விந்தை இந்தியாவின் அரசியலில் சர்வசாதாரணமாக உள்ளது. இதையெல்லாம் கண்டு சலிப்படைந்து தளபதி கரியப்பா இராணுவ ஆட்சிக்கு துணை தேடுகிறார். நாட்டின் நல்ல எதிர்காலத்திற்காகவே அவர் அப்படி விரும்பினாலும் மக்களின் விருப்பம் அதுவல்ல.

நிருவாகக் குறைபாடுகளை அகற்றிப் பொதுநலத்திற்காகத் தியாக உள்ளத்தோடும் கடமை உணர்ச்சியோடும் செயலாற்றும் எண்ணம் ஆளவந்தாருக்கு ஏற்படவேண்டும். மக்களும் கடமை தவறும் அமைச்சர்களைக் கண்டித்து அவர்களது தவறுகளை உணரும்படிச் செய்ய வேண்டும். காலத்தை வீணாக்காது, நடுநிலைமையோடு அபிவிருத்தி அலுவல்களைச் செய்தால் கரியப்பாவின் அபயாய அறிவிப்பு இராது. ஆனால் இன்றுள்ள பூசல், அரசியலின் பேரால் சுரண்டல், மொழிவழி ஆதிக்கம், பகுதி பார்த்து முன்னேற்றத் திட்டங்களை நிறைவேற்றுதல் என்ற பேத உணர்ச்சியெல்லாம் மறையாவிட்டால் நாம் விரும்பாமலே தளபதி கரியப்பாவின் ஆவல் நிறைவேறக்கூடும். படைபல கண்டவர், நாடு பல சுற்றியவர் பொறுப்புகள் பல ஏற்றவர், நாட்டு நிலை உணர்ந்தவர், அமைதி நேரத்தில் ஆலோசித்துச் சொல்கிறார் இந்தியாவிற்கு இராணுவ ஆட்சி சில காலத்திற்காவது இருந்தாகவேண்டும் என்று. மத்திய ஆட்சியினர் தங்களது இன்றைய மந்தப் போக்கினைத் திருத்திக்கொண்டு தெளிவான நிருவாகம் நடத்தவில்லையென்பதே இதன் கருத்தாயிருக்க முடியும். இந்நிலையில் ஒன்று இந்திய அரசாங்கத்தின் போக்கு மாறவேண்டும் அல்லது மக்களின் போக்கு மாறவேண்டும்? எது நல்லது எது தேவை என்பதைக் காலமே கணிக்க வல்லது. காலதாமதமானாலும் ஜனநாயகம் சரியான பாடங்களை அவ்வப்போது கற்பிக்கத் தவறாது என்பதை வரலாறு காட்டுகிறது.

★


## படித்துவிட்டீர்களா?

### கண்ணதாசன்

கருத்துச் சுனை

கட்டுரைகள், கதைகள், நாடகங்கள்.

இதுவரையும் நூல் வடிவில் வெளிவராத எழுத்துச் சிற்பங்கள்.

★ தத்துவக் கட்டுரைகள் தரணியை அளக்கவல்லன.
★ இலக்கியக் கட்டுரைகள் இன்பவெள்ளம் பாய்ச்சுவன.
★ சிறுகதைகள் சிந்தனையைக் கிளரி விடுவன.
★ நாடகங்கள் நெஞ்சில் நிலைத்து நடம்புரிய வல்லன.

பைந்தமிழ்ப் பதிப்பகத்தின் முதல் முயற்சி

முத்தனைய அச்சுக்கோப்பு
சித்தங் கவரும் கட்டிடக் கோப்பு
காண்பதற்குக் கண்காட்சி
கைக்கொள்ள எழில்நீட்சி
படிப்பதற்கு மனமாட்சி
பைந்தமிழின் வளமாட்சி.

இத்துணைக்கும் விலை ரூ. 2-50

பதிவு அஞ்சலில் பெற விரும்பினால் 75 காசுகள் அதிகமாக அனுப்புக.

விற்பனையாளர்க்கு 25% கழிவு கிடைக்கும்.

விற்பனை உரிமை

தென்றல்

2/127, மவுண்ட்ரோடு சென்னை-6.



## வெண்பாப் போட்டி 17.

★

ஈற்றடி

திராவிடத்தில் ஓங்கும் சிறப்பு.

இறுதி நாள் 15-4-61.

தென்றல் வெண்பாப் போட்டி : : சென்னை-6

# வெண்பாப் போட்டி

## 16. தென்னிலங்கை மூட்டிவரும் தீ.

பாம்பும் கடாவுமிகப் பாலூட்டிப் புல்லூட்டி
ஓம்பும் மனிதனுயிர் ஒடவைத்து—வீம்பாலே
பின்னழியும் பெற்றிபோல் பெற்றுரைத் தின்றழியும்
தென்னிலங்கை மூட்டிவரும் தீ.

—மணவை. கா. மாறன், கோட்டாம்பட்டி.

நெஞ்சின் திறங்கெட்டு நேர்மை ஒளிகெட்டுக்
கெஞ்சிப் பிறர்காலின் கீழ்விழுந்து—துஞ்சினர்போல்
தன்உறக்கம் நீங்காரைத் தட்டி எழுப்புவதே
தென்னிலங்கை மூட்டிவரும் தீ.

—நீலமணி, கோவில்பட்டி.

தனக்குரிய செங்கோலைத் தண்டமிழ்த்தாய் தாங்க
மனமொத்துப் போராடும் மாமறவர்—தங்களுடை
வன்குருதி நீருற்ற மண்ணில் மறநைந்திடுமே
தென்னிலங்கை மூட்டிவரும் தீ.

—மீனவன், நெய்வேலி.

இறப்போர் தொகைபெருக ஈழத்தமிழர்
அறப்போர் தொடுத்திட்டார் அஃது—சிறப்போடு
மின்னிலங்கு நுண்ணிடையாய் தாமழியச் சிங்களர்
தென்னிலங்கை மூட்டிவரும் தீ.

—வீ. பரந்தாமன், இலங்கை.

அந்நாளில் மூவேந்தர் ஆண்டிருந்தார் தென்னிலங்கை
இந்நாளில் முண்டமாய் வைக்கின்றார்—சிங்களவர்
பெண்ணுன மந்திரியால் தமிழர்கட்கு வந்ததுவே
தென்னிலங்கை மூட்டிவரும் தீ.

—திசையன்விளை இளம்மதி, கோவில்பட்டி.

எங்கிருந்தோ வந்தார் இலங்கையில் குந்தினார்
எங்களைக் கொல்லுகின்றார் எத்துகின்றார்—சிங்களவர்
பெண்ணுன மந்திரியின் பேயாட்சி யின்விளைவே
தென்னிலங்கை மூட்டிவரும் தீ.

—குமாரசுப்பிரமணியம், குருமலை.

மண்ணுலகை ஆண்ட மணித்தமிழர் மாண்பொழிக்க
எண்ணினர்காண் சிங்களத்தார்; எம்மினத்தார்—அன்னவரின்
புன்மையினை மாய்க்கப் புலியானார்; வென்றிடுமோ
தென்னிலங்கை மூட்டிவரும் தீ.

—கி. இராசமாணிக்கம், எரகுடி.

பற்றி யெரிகிறது பார்மினோ பாதகரைச்
சுற்றியொரு கோட்டை சுடர்விட்டு—முற்றிவிடு
கன்ன லனையதமிழ்க் காவலர்கள் நெஞ்சத்தில்
தென்னிலங்கை மூட்டிவரும் தீ.

—பி. எஸ். இராமையா, டி. கல்லுப்பட்டி.

செந்தமிழர் சிந்துகின்ற செங்குருதி மூழ்கிவரும்
சிந்தையற்ற சிங்களவ ராட்சியில்—கொந்தளிப்பு!
இன்னலங்கு நீடித்தால் இந்தியத்தை தீண்டுங்காண்!
தென்னிலங்கை மூட்டிவரும் தீ.

—எ. பார்த்தசாரதி, கரூர்.

தென்னவர்தம் சோதரர்கள் தென்னிலங்கைத் தீவினிலே
இன்னல் படுகின்றார் சிங்களரால்—அன்னார்தம்
துன்பம் களையாத் துரைத்தனத்தில் பற்றாதோ
தென்னிலங்கை மூட்டிவரும் தீ.

க. பொ. இளம்வழுதி, கலிதீர்த்தாள்குப்பம்.

காடு திருத்தியே கண்ணுக் கழகுதரும்
நாடாகச் செய்திட்ட நம்மினத்தார்—கேடுற்றுச்
செந்நீரைச் சிந்துகின்றார் செப்பிடுவாய் நன்றாமோ
தென்னிலங்கை மூட்டிவரும் தீ.

—பொன்னித்துறைவன், ஆனைமங்கலம்.

பச்சைத் தமிழரினம் பாரில் தலைநிமிர்ந்தோங்கக்
கச்சை அணிகாமா ராசரே!—அச்சமேன்?
மன்னுபுகழ் நம்மவரை மாய்த்திடுதல் காணீரோ
தென்னிலங்கை மூட்டிவரும் தீ.

—பாலைக்கண்ணன், பாலக்குறிச்சி.

அஞ்சாத் தமிழகத்தின் அண்டைநா டென்றுரைத்தோம்
வஞ்சிக்கும் சிங்களவர் வன்கண்ணர்—அஞ்சுகமே
அன்புறவு கொள்ளுதற்கோ ஆணவத்தால் மாள்வதற்கோ
தென்னிலங்கை மூட்டிவரும் தீ.

—சி. பி. சாமி, ஆற்காடு.

இன்னல் பலகொண்(டு) இலங்கையில் வாழுகின்ற
கன்னல் தமிழ்மொழியார் கண்ணீரைப்—பண்டிதரே!
நன்முறையில் நீக்கிட நாடி அணைப்பீரோ?
தென்னிலங்கை மூட்டிவரும் தீ.

—மு. வில்லவன், திண்டுக்கல்.

சிங்களத் தீவினிலே சிங்கள மன்றிநம்
சங்கத் தமிழுக் கிடமிலையாம்—சிங்கத்தின்
தன்மான முள்ள தமிழன் பொறுப்பனோ
தென்னிலங்கை மூட்டிவரும் தீ.

—க. கைலாயம், மதுரை-9.

சிங்களத்தி லேவதியும் சிங்கநிகர் தீந்தமிழர்,
தங்களுரி மைகாக்கத் தான்றயங்கார்;—பொங்கிநின்று
தன்னாட்சி காணுதற்கே கண்ணோட்ட மாயமையும்
தென்னிலங்கை மூட்டிவரும் தீ.

—பி. சி. சாமிநாதன், அரக்கோணம்.

மானம், இனப்பற்று, மங்கா மொழிப்பற்று
மீனின் சினையளவும் வேண்டாதார்—ஏனிங்கே
பொன்னாட்டை ஆள்கின்றார்? புத்திவரச் செய்யாதோ
தென்னிலங்கை மூட்டிவரும் தீ.

—சா. நடராசன், சென்னை-12.

சிங்களவர் வாழ்க்கைதனைச் சீராக்கி, அன்னவரை
மங்களமாய் வாழவைத்த மாப்பெருமை கொண்டிலங்கும்
மன்னுபுகழ் வீர மறவர்களை மாய்த்திடுதே,
தென்னிலங்கை மூட்டிவரும் தீ.

—பிரம்பை. அறிவன்பன், சென்னை-11.

தன்மானம் காத்திடப் போந்தனர் நம்தமிழர்
என்மானம் கோறென்றார்; பச்சைத்—தமிழரின்
பண்பட்ட உள்ளத்தைப் பற்றி எரிக்காதோ
தென்னிலங்கை மூட்டிவரும் தீ.

—பூ. சந்திவிரசாமி, கோவில்பட்டி.

வீதியிலே செல்வோரை வெட்டுவதும், குத்துவதும்
தீதெலாம் செய்கின்றார் சிங்களத்தார்—நீதியின்றி
வன்னெஞ்சம் கொண்டுமே வாட்டுதற்கே நம்மவரை
தென்னிலங்கை மூட்டிவரும் தீ.

—குமர. நடராசன், மணக்கரை.

சிங்களத்தை ஆள்வோரால் செந்தமிழர் செத்ததற்கு
இங்கமைச்சர் நேருதான் என்செய்தார்—தங்கமே!
வன்னெஞ்சர் தீயர் மனப்பாங்கை காண்பதற்கே
தென்னிலங்கை மூட்டிவரும் தீ.

—கடாரங்கொண்டான், தேவகோட்டை.

இந்தி உனக்கங்கே ஈனம் உயிர்த்தோழா!
முந்தி எழுந்து மொழிகாப்பாய்—சத்தியமாய்,
மின்மினியைப் போல மிகவிரைவில் மாறிவிடும்
தென்னிலங்கை மூட்டிவரும் தீ.

—கண்ணகி, மட்டக்களப்பு.

கோவலனைக் கொன்ற கொடுங்கோல் நிமிர்த்திட்டான்
காவலன்தன் ஆருயிரால்! கைவளைபோல்—மாவிலங்கை
பெண்ணரசி கோலைப் பிளந்து வளைப்பதுதான்
தென்னிலங்கை மூட்டிவரும் தீ.

—அ. முத்தழகு, மட்டுநகர் இலங்கை.

அன்னைமொழி அல்லலுறல் ஆற்றேனென் வாழ்வதுவே
சொன்னமொழி காத்திடுவேன் சோர்வடையேன்—இன்னமும்
என்னிதயம் தாங்குவதா இச்செயலால் என்னினத்தில்
தென்னிலங்கை மூட்டிவரும் தீ.

—கைதை-தில்லைதாசன், இலங்கை.